உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பாசூர்ப் புராணம்.

(கத்திய ரூபம்.)

இஃது

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றித்தர,

சென்னை - அள - சுப - பள

சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள் - ஏஜெண்டு

தேவகோட்டை - பெரி - அள

சொக்கலிங்கஞ்செட்டியாரால்,

சென்னை

திரிபுரசுந்தரிவிலாசம்பிரஸிற்

பதிப்பிக்கப்பட்டது.

சார்வரிஷு-ஐப்பசிமீ

1900.

சிவமயம்.

# சிறப்புக்கவி.

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனம்
வித்துவான் - சேற்றூர்
## ஸ்ரீமத் - சுப்பிரமணியக்கவிராஜர்
இயற்றிய
பதினான்குசீர்விருத்தம்.

சீர்மலியு நற்றொண்டை நாடதனி லொட்டாத
திகழ்கின்ற தளிக டம்முள்
செல்வமலி தென்பாசூர்த் தலமான்மி யந்தன்னைத்
தேர்ந்தன்பர் நாளு மேத்த
வேர்மலியு நகர்தேவ கோட்டையினிற் றளபதியா
மெழிற்சொக்க லிங்க பூப
னினிதுவேண் டிடக்கனிதேன் பால்பழம்போற் சுவை
ளிலகியபு ராணஞ் சொற்றான் [மொழிக
தார்மலியு முயர்சைவ வேளாள குலதிலகன்
தமிழ்மொழியை யேப்ப மிடுவோன்
தன்னிகரில் மெய்கண்ட சித்தாந்த சாத்திரத்
தனியெல்லை கண்ட தீரன்
கார்மலியும் பூவையூ ரட்டாவ தானியெனக்
காசினிப்பா வலர்வி யக்குங்
கனிந்தாந்த வெண்ணன்பன் கலியாண சுந்தரநற்
கவிராஜ சிங்க மாதோ !

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச்செய்த

# திருப்பாசூர்த் தேவாரம்.

பண் - காந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

சிந்தையிடையார் தலையின்மிசையார் செஞ்சொல்லார்
வந்துமாலை வைகும்போழ்தென் மனத்துள்ளார்
மைந்தா மணாளாவென்ன மகிழ்வாரூர்போலும்
பைந்தண் மாதவிசோலை சூழ்ந்தபாசூரே. (௧)

பேரும்பொழுதும் பெயரும்பொழுதும் பெம்மானென்
றாருந்தனையு மடியாரேத்த வருள்செய்வா
ரூருமரவ முடையார்வாழு மூர்போலும்
பாரின்மிசை யார்பாடலோவாப்பாசூரே. (௨)

கையாற்றொழுதுதலை சாய்த்துள்ளங் கசிவார்கண்
மெய்யார் குறையுந் துயரந்தீர்க்கும் விகிர்தனார்

நெய்யாடு தலஞ்சுடையார் நிலாவுமூர்போலும்
பைவாய் நாகங்கோடலீனும் பாசூரே. (௩)

பொங்காடரவும் புன்லுஞ்சடைமேற் பொலிவெய்தக்
கொங்கார் கொன்றைசூடி யென்னுள்ளங் குளிர்வித்தா
தங்காதலியுந் தாமும்வாழு மூர்போலும்
பைங்கான்முல்லை பல்லரும்பீனும் பாசூரே. (௪)

ஆடற்புரியுமை வாயரவொன்றரைச் சாத்துஞ்
சேடச்செல்வர் சிந்தையுளென்றும் பிரியாதார்
வாடற்றலையிற் பலிதேர்கையா ரூர்போலும்
பாடற்குயில்கள் பயில்பூஞ்சோலைப் பாசூரே. (௫)

கானின்ற திரக்கனல் வாய்நாகங் கச்சாகத் [கண்
தோலொன் றுடையார் விடையார் தம்மைத்தொழுவார
மால்கொண் டோடமையறீர்ப் பாரூர்போலும்
பால்வெண் மதிதோய் மாடஞ்சூழ்ந்த பாசூரே. (௬)

கண்ணினயலே கண்ணொன் றுடையார் கழலுன்னி
யெண்ணுந்தனையு மடியாரேத்த வருள்செய்வா
ருண்ணின் றுருகவுவகை தருவாரூர்போலும்
பண்ணின்மொழியார் பாடலோவாப் பாசூரே. (௭)

தேசுகுன்றத் தெண்ணீரிலங்கைக் கோமானைக்
கூசவடர்த்துக் கூர்வாள்கொடுப்பார் தம்மையே

# திருப்பாசூர்த் தேவாரம்.

பேசிப்பிதற்றப் பெருமைதருவா ரூர்போலும்
பாசித்தடமும் வயலுஞ்சூழ்ந்த பாசூரே. (௮)

நகுவாய்மலர் மேலயனு நாகத்தணையானும்
புகுவாயறியார் புறநின்றோரார் போற்றோவா
செகுவாயுகு பற்றலைசேர் கையாரூர்போலும்
பகுவாய் நாரையாரல் வாரும்பாசூரே. (௯)

தூயவெயினின் றுழல்வார்துவர் தோயாடையா
நாவில்வெய்ய சொல்லித்திரிவார் நயமில்லார்
காவல்வேவக் கணையொன்றெய்தா னூர்போலும்
பாவைக்குரவம் பயில்பூஞ்சோலைப் பாசூரே. (௧0)

ஞானமுணர் வான்காழி ஞானசம்பந்தன்
றேனும்வண்டு மின்னிசைபாடுந் திருப்பாசூர்க்
கானம்முறைவார் கழல்சேர்பாட லிவைவல்லா
ரூனமில ராயும்பர்வானத் துறைவாரே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு சுவாமிகள்

அருளிச்செய்த

# திருக்குறுந்தொகை.

திருச்சிற்றம்பலம்.

முந்திமூவெயி லெய்தமுதல்வனார்
சிந்திப்பார்வினை தீர்த்திடுஞ்செல்வனா
ரந்திக்கோன்றனக் கேயருள்செய்தவர்
பந்திச்செஞ்சடைப் பாரூரடிகளே. (௧)

மடந்தைபாக மகிழ்ந்தமணாளனார்
தொடர்ந்தவல்வினை போக்கிடுஞ்சோதியார்
கடந்தகாலனைக் கால்கொடுபாய்ந்தவர்
படர்ந்தநாகத்தர் பாரூரடிகளே. (௨)

நாறுகொன்றையு நாகமுந்திங்களு
மாறுஞ்செஞ்சடை வைத்தவமுதனார்
காறுகண்டத்தர் கையதோர்சூலத்தர்
பாறினோட்டினர் பாரூரடிகளே. (௩)

வெற்றியூருறை வேதியராவர்நல்
லொற்றியேறுகந் தேறுமொருவனா
கெற்றிக்கண்ணினர் நீளரவுந்தனைப
பற்றியாட்டுவர் பாசூரடிகளே. (ச)

மட்டவிழ்ந்தமலர் நெடுங்கண்ணிபா
லிட்டவேட்கைய ராகியிருப்பவர்
துட்டரேலறியே னிவர்சூழ்ச்சிமை
பட்டநெற்றியர் பாசூரடிகளே. (ரு)

பல்லிலோடுகை யேந்திப்பகலெலா
மெல்லிநின்றிடு பெய்பலியேற்பவா
சொல்லிப்போய்ப்புகு மூரறியேனசொலீர்
பல்குநீற்றினர் பாசூரடிகளே. (சா)

கட்டிவிட்ட சடையர்கபாலிய
ரெட்டிநோக்கி வந்தில்புகுந்தவ்வவ
ரிட்டமாவறியே னிவர்செய்வன
பட்டநெற்றியர் பாசூரடிகளே. (எ)

வேதமோதி வந்தில்புகுந்தாரவா
காதில்வெண்குழை வைத்தகபாலியார்
நீதியொன்றறியார் நிறைகொண்டனர்
பாதிவெண்பிறைப் பாசூரடிகளே. (அ)

## திருப்பாசூர்த் தேவாரம்.

சாம்பல்பூசுவர் தாழ்சடைகட்டுவ
ரோம்பன்மூவெரு தேறுமொருவனார்
தேம்பல்வெண்மதி சூடுவர்தீயதோர்
பாம்புமாட்டுவர் பாசூரடிகளே. (௯)

மாலினோடு மறையவன்றானுமாய்
மேலுங்கீழு மளப்பரிதாயவ
ராலினீழலறம் பகர்ந்தார்மிகப்
பால்வெண்ணீற்றினர் பாசூரடிகளே. (௧௰)

திரியுமூவெயில் செங்கணையொன்றினா
லெரியவெய்தன ரேனுமிலங்கைக்கோ
னெரியவூன்றி யிட்டார்விரலொன்றினாற்
பரியர்நுண்ணியர் பாசூரடிகளே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

---

## திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

விண்ணாகி நிலனாகி விசும்புமாகி
வேலைசூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
வெண்ணாகி யெழுத்தாகி யியல்புமாகி
யேழுலகுந் தொழுதேத்திக் காணநின்ற

கண்ணாகி மணியாகிக் காட்சியாகிக்
காதலித்தங் கடியார்கள் பரவநின்ற
பண்ணாகி யின்னமுதாம் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (க)

வேதமோர் நான்காயா றங்கமாகி
விரிக்கின்ற பொருட்கெல்லாம் வித்துமாகிக்
கூதலாய்ப் பொழிகின்ற மாரியாகிக்
குவலயங்கண் முழுதுமாய்க் கொண்டலாகிக்
காதலால் வானவர்கள் போற்றியென்றுங்
கடிமலர்க ளவைதூவி யேத்தநின்ற
பாதியோர் மாதினைப் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (உ)

தடவுரைகளேழுமாய்க் காற்றாய்த் தீயாய்த்
தண்விசும்பாய்த் தண்விசும்பி னுச்சியாகிக்
கடல்வலயஞ் சூழ்ந்ததோர் ஞாலமாகிக்
காண்கின்ற கதிரவனு மதியுமாகிக்
குடமுழவச் சரிவழியே யனல்கையேந்திக்
கூத்தாட வல்ல குழகனாகிப்
படவரவொன் றதுவாட்டிப் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (ந)

சீராருஞ் செஞ்சடைமே லரவங்கொன்றை
நிறைமதியு முடன்சூடி நீதியாலே
சீராரு மறையோதி யுலகமுய்யச்
செழுங்கடலைக் கடைந்தகட னஞ்சமுண்ட
காராருங் கண்டனைக் கச்சிமேய
கண்ணுதலைக் கடலொற்றி கருதினானைப்
பாரோரும் விண்ணோரும் பரசும்பாசூர்ப்
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (ச)

வேடனாய் விசயன்றன் வியப்பைக்காண்பான்
விற்பிடித்துக் கொம்புடைய வேனத்தின்பின்
கூடினா ருமையவளுங் கோலங்கொள்ளக்
கொலைப்பகழி யுடன்கோத்துக் கோரப்பூச
லாடினார் பெருங்கூத்துக் காளிகாண
வருமறையோ டாறங்க மாய்ந்துகொண்டு
பாடினார் நால்வேதம் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (ரு)

புத்தியினாற் சிலந்தியுந்தன் வாயினூலாற்
பொதுப்பந்த ரதுவிழைத்துச்சருகான்மேய்ந்த
சித்தியினா லரசாண்டு சிறப்புச்செய்ய
சிவகணத்துப் புகப்பெய்தார் திகைமின்மிக்க

# திருப்பாசூர்த் தேவாரம்.

வித்தகத்தால் வெள்ளானை விள்ளாவனபு
விரவியவா கண்டதற்கு வீடுகாட்டிய
பத்தர்களுக் கின்னமுதாம் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (சு)

இணையொருவர் தாமல்லா லியாருமில்லா
ரிடைமருதோடேகம் பத்தென்று நீங்கா
ரிணைவரியரி யாவர்க்கு மாதிதேவ
ரருமந்த நன்மையெலா மடியார்க்கீவர்
தணன்முழுகு பொடியாடுஞ் செக்கர்மேனித்
தத்துவனைச் சாந்தகிலி னளறுதோய்ந்த
பணைமுலையாள் பாகனை யெம்பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (எ)

அண்டவர்கள் கூடல்கடைய வதனுட்டோன்றி
யதிர்த்தெழுந்த வாலாலம் வேலைஞால
மெண்டிசையுஞ் சுடுகின்ற வாற்றைக்கண்டு
மிமைப்பளவி லுண்டிருண்ட கண்டர்தொண்டர்
வண்டுபடு மதுமலர்க ளேவினின்று
வானவர்க டானவர்கள் வணங்கியேத்தப்
பண்டரங்க வேடனையெம் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியேனுய்ந்தவாறே. (அ)

ஞாலத்தை யுண்டதிரு மாலுமற்றை
நான்முகனு மறியாத நெறியான்கையிற்
சூலத்தா லந்தகனைச் சூலத்துக்கோத்துத்
தொல்லுலகிற்பல்லுயிரைக்கொல்லுங்கூற்றைக்
காலத்தா லுதைசெய்து காதல்செய்த
வந்தணனைக் கைக்கொண்ட செவ்வான்வண்ணர்
பாலொத்த வெண்ணீற்றர் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (௯)

வேந்தனெடு முடியுடைய வரக்கர்கோமான்
மெல்லியலா ளுமைவெருவவிரைந்திட்டோடிச்
சாந்தமெனா நீறணிந்தான் கயிலைவெற்பைத்
தடக்கைகளா லெடுத்திடலுந் தாளாலூன்றி
யேந்துதிர டிண்டோளுந் தலைகளும்பத்து
மிறுத்தவன்ற னிசைகேட்டிரக்கங்கொண்ட
பாந்தளணி சடைமுடியெம் பாசூர்மேய
பரஞ்சுடரைக் கண்டடியே னுய்ந்தவாறே. (க௦)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பாசூர்ப்புராணம்.

## காப்பு.

### வலம்புரி விநாயகர்.

நலம்புரி யருண்மெய்ஞ்ஞான நண்ணவுமண்ணினி
ன்ற, மலம்புரி வினைகணீங்கி வாழவுந் தாழ்வொன்றில்
லாப், புலம்புரி பாசூர்மேய புனிதனன் றினிதுநல்கும்,
வலம்புரிப் பிள்ளையார்பொன் மலரடி வணக்கஞ் செய்
வாம். (க)

### நடேசர்.

கார்மன்னுமேனிக் கவின்கண்ணனென் கண்ணன்
மற்றைச், சீர்மன்னுந் தேவர்மறை யாவுந்தரிசிக்கவொ
ண்ணு, வேர்மன்னுஞ் சோதியருண்மேனி கொண்டென்
றுமன்றுட், பார்மன்னு மாடல்பயில்பாதம் பணிந்துவா
ழ்வாம். (உ)

### பாசூர்நாதர்.

மருண்மேவு மின்றவினையின் பவமீறி லின்மைத்,
தெருண்மேவு மெய்ம்மைத் திகழ்சேர் நெறிசொலாயின்,

கருண்மேவு பாசூரவைதன் னுளமர்ந்தவந்தப, பொரு
ண்மேவுசெய்யப் புயங்கப் பதம்போற்றிசெய்வாம். (௩)

தங்காதலியம்மை.

துன்னுமுற்பவம் பாற்றிடவேண்டி மெய்ச்சுடரை
ப, பொன்னினம்பலந் தன்னிடைப் பரிவொடும்போற்றி,
மன்னுமாநடங்கண்டிட வணங்கியேவாழு, மன்னேதன
னடிசென்னிவைத் துன்னுதுமன்பால். (௪)

கணபதி.

ஈங்கியம்பு மிக்கதைக்கிடையூறகன்றினிமை
நாங்களெய்தவு மேலதுநடக்கவு நல்க
வோங்கு மைங்கரனுலு வாய்மும்மதத்துவாவின
பாங்குசேர் கழலுன்னிநற் பரிவொடுபணிவாம் (௫)

சுபபிரமணியர்.

தீரவிண்ணவர்சேனையி னதிபதிசிறந்த
சூரன்மார்பொடு சுடர்க்கிரியெனதடுதுயர
பீரவேலெடுத்தெழி லிளமயின்மேல்வருமிளைய
வீரன்வீரமும்விளம்புது முளங்கொடுவியந்தே. (௬)

சமயகுரவர்.

காழிநாடர் தங்கமலமாமலர்ப் பொனின்கழலு
மாழிபிற் சிலைத்தூணுடன் மிதந்தவரடியுங்

தோழராயவன் றெண்டனர் சரணமுந்தொண்டின்
வாழும் வாதவூராளிபாதமுமுளம வைப்பாம். (எ)

திருத்தொண்டா.

நண்டியாகிய சேய்ஞ்ஞலூர்ப் பிள்ளையார்தலையாக
தொண்டர்கூட்டங்கள் யாவையு மன்பினாற்றொழுது
மண்டலம்புரந்தரு ளனபாயர் செம்மலர்த்தாள்
பண்டுநாஞ்செய்த பாவங்கள் யற்றறப்பணிவாம். (அ)

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

---

## நைமிசாரணியச் சருக்கம்.

---

முன்னர் ஒருகாலத்திலே பரதகண்டத்திலே நைமிசாரணியத்திலேஞானத்திலும், கல்வியிலும், அறிவிலும், ஒழுக்கத்திலும், தவத்திலுஞ்சிறந்து, சன்மார்க்கமாகிய சைவசமயாசார நெறியினராய் விளங்கியமுனிவாகள் பலர் ஒருங்குகூடிக் கருணைக்கடலாகிய கண்ணுதல் மூர்த்தியைத் தியானித்துக் கொண்டிருக்கையில், வைதிகசைவ சிகாமணியாகிய சூதமகாமுனிவர் சிவ சிவ சிவ சிவ என்னும் மோட்சவிதாயகமான மகா மந்திரத்தினை யுச்சரித்துக் கொண்டே அவ்விடம் எழுந்தருளி

னர். அதுகண்ட நைமிசாரணிய முனிவர்கள் உடனே
யெழுந்து உபசரித்து அழைத்துவந்து ஆசனத்திருத்தி
ப பலமுகமன்கூறி, சுவாமி ! முனிவர்பெருமானே ! கிரு
பாநிதியே ! அனந்தகல்யாணசுந்தரகுண சம்பன்னரான
சிவபெருமானது திருவடிகளை யொருபோதுமறவாதசிந்
தையனே ! முன்பு தேவரீர் திருவாய்மலர்ந்தருளிய திரு
வலிதாய மான்மியத் தெளிட்டாவமுதஞ் செவிமடுக்கவு
ண்டு புனிதரானோம், அதுபோலவிப்போது திருப்பா
சூரென்னுங் குடசாரண்ய மான்மியத்தினையும் போதித்
தருளி யடியேங்களை யாட்கொள்ள வேண்டுமென்று
பிரார்த்தித்தனர். அதுகேட்ட வருந்தவ முனிவராகிய
சூதமுனிவர் மிகுந்த சந்தோஷமனத்தராய் அவர்கள்
வேண்டுகோளுக்கிரங்கி அம்முனிவர்களை நோக்கி அந்த
ணர்மணிகளே ! நானின்றுபெற்ற பெருமையே பெரு
மை, பாக்கியமே பாக்கியம், அகிலலோக நாயகியாகியா
மெனது அன்னையாகிய பார்வதியாரோ இக்குடசாரணிய
த்திலெழுந்தருளித் தனது நாயகனைப்பூசித்தனரெனின்,
இத்தலத்துப் பெருமையினையெடுத்துக் கூறுவார்யார்.
தங்காத்லியம்மை சமேதராகிய பாசூர்நாதரைத்திருமா
லுமேத்தித்தனக்குண்டாகிய பிரமகத்தினையொழித்துக்

கொண்டு இன்றும் வீரராகவனெனும் பெயருடன்திரு வெவ்வளூரிலிருந்து பூசித்துவரும் பெருவாழ்வைப்பெ ற்றுவாழ்கின்றனர். தேவர்கள், முனிவர்கள், யோகர், சித்தர்,விஞ்சையர், இயக்கர் பலர் இப்பதியில்சம்புசப்த வாச்சியார்த்தனாகிய சிவபெருமானைவழிபட்டுஅருள்பெ ற்றனர். இத்தலத்தில் சந்திரனாலுண்டாக்கபெற்றசோ மதீர்த்தத்தில், மாக மாசத்திலாகிலும், பௌர்ணமை, அமாவாசை, சந்திரசூரியகிரகணமுதலியபுண்ணியகால ங்களிலாகிலும் நீராடுவாராயின், அவர்க ளதுவரையிற் செய்த பாவமனைத்து நீங்கப்பெற்று விசேடபுண்ணிய மடையப்பெறுவர். இத்தலத்தி லொருபிடியன்னமொரு சிவனடியாருக் களிக்கினும், ஒருபிடிபுல் ஒருபசுவிற்களி க்கினும் அதனாலடையும் பலனிவ்வளவெனை என்றற் சொல்லுந்தரமன்று. இத்திருப்பாசூரில்ஒருவருடஞ்சிவ ராத்திரிவிரத நோற்பின் மற்றையதலங்களில் ஒருகோடி சிவராத்திரி விரதமனுட்டித்த பயன்பெறுவர். பாசூர்நா தனுக்கு அபிடேகஞ்செய்பவரும், நைவேதனஞ் சமர்ப் பிப்பவரும், கோபுரங்கள் மண்டபங்கள் கட்டுபவரும், ஆலயம் புதுக்குபவரும், உற்சவகோலமுயர்வாகச் செய் பவரும், இம்மையிற் பலசெல்வங்களையுமனுபவித்துமறு

மையிற் றிருக்கைலைமலையை விட்டுநீங்காத பெருவாழ்வு பெறுவர். இதுமட்டோ இன்னுமத்தலமுத்தியையருளு ம, பத்தியை விளைவிக்கும், சித்தியையுந்தவும், அதனபெ ருமைகளளவிறந்தனவுள. யாவுமெடுத்துக்கூற நான்வலி மை பெற்றிலேன். ஆயினும் உமது விருப்பநிறைவுபெற வேதநாதன் பாசூர்நாதன் றிருவடிகளை எனமனதிற் சிந்தித்து அறிந்தவளாயிற் சொல்லுகின்றேன், அனபு டனகேட்பீராகவென்று மேலுங் கூறத்தொடங்கினர்

நைமிசாரணியச்சருக்க முற்றிற்று.

---

## குடசாரணியச் சருக்கம்.

---

சிவபக்த சிரோமணிகளே! அனேகமாயிரமான கற்புங்கள்தோறுந் தேவர்கள்செய்த புண்ணியமனைத்து ந்திரண்டு அருமறைமுடிவிலமரும் அம்பிகை சமேதன் றிருவடிகளிற்றங்க அப்பெருபா னெழுந்தருளி யிருக்கு ந்தலம் புண்ணியாவர்த்தமெனும் பெயர்பெற்றது. இத் தலம் தெற்கில் பாலாற்றினலும், மேற்கில் கல்லாற்றின லும், வடக்கில் குசஸ்தலையாற்றினலும், கிழக்கில் சமுத் திரத்தினலுஞ் சூழப்பெற்று விளங்குவது. சிவயுகங்க

ளுக்குமுன்பு ஒருகாலத்திலித்தலம் பெருங்காடாயிருந்தது. இக்காட்டின் மத்தியில் ஒருயோசனையுயரமும்ஒரு யோசனை பரவலுமாகக்குடசமென்னு * மொருவிருட்சம்வளர்ந்தோங்கியிருந்தது. இதனடியிலெழுந்தருளியிருந்த கருணையங்கடவுளாகிய கண்ணுதல் மூர்த்தியினைப பூசித்துமுத்திபெற்றவர்கள் கணக்கில்லை. ஊழிக்காலத்தில் உலகங்களெல்லா மழிந்தகாலத்தும், முனிவர்போற்றுமூவாமுதல்வன் றனது அருட்சத்தியாகிய வம்மையாருடன் எழுந்தருளப்பெற்ற இத்தலமும் இவ்விருட்சமுமழிவதில்லை. யுகமுடிவில்பிரசண்டமாருதம் அண்டரண்ட பகிரண்டங்களையு மதனுளளிருக்கு மேழுலகங்களையுங் கண்டதுண்டங்களாம்படிமோத இகுடசவிருட்சமசையாதுநிற்கும். இதனடியி லெழுந்தருளியிருக்கும் புண்ணியவடிவினனாகிய சிவபெருமான் அடிகளிலும் அரையிலும், மார்பிலும், கைகளிலும், புயங்களிலும், சடாபாரத்திலுந் தங்கியிருக்கும்பாம்புகள் அந்தச்சண்டமாருதத்தினையுண்டு பசிமாறி யெனதப்பன்சங்கரன்றிருவடிகளில் இரத்தினங்களாகிய புட்பங்களைப் பொழியும். அதனால் இத்தலத்திற்கு மாணிக்கபுரியெனவும்பெ

* குடசம்-மலை மல்லிகை.

யருண்டு, பின்பு எழுகடலு மொருகடலாய்ப் பெருவெள்ளமானபோது இம்மாணிக்கபுரி அவ்வெள்ளத்தின் மீது தோணிபோல் மிதக்கும். அதனால் இத்தலத்திற் குப்பிரளயாகலபுரியெனவும் பெயருண்டு. பின்னரக்கினி யெழுந்து உலகங்களையெல்லாஞ் சுட்டெரிக்க அங்கெருப்பினீறான பிரமவிஷ்ணுக்களி னீற்றினைத்தன் மேனிமுழுவதிலுந் தரித்துக்கொண்டு விளங்குமுக்கட்பரமன் சூலத்தினடுவிலையி னுனியிலொருபுட்பமாக இப்பிரளயாகலபுரிதங்கும். சங்காரகாலத்திலேயும் இத்தலஞ்சூக்குமமாகி யிருக்குந்தன்மையால் மாயாபுரியெனவும் பெயருண்டு. இத்தகையபதியின் பெருமையை யாரறியவல்லார். இத்தலத்தினைக்காட்டிலுஞ் சிறந்ததலமெங்கும் இடையாது. இத்திருப்பதியின்கண்ணே எழுந்தருளி யிருக்கும் பரமபதியின் பாங்கர் ஓங்கிவளரும் குடசத்தினை நெடுந்தூரத்திலே கண்டுவணங்கினும் அவரழியாத முத்தியின்ப மனையைப்பெறுவார். மேலும் அருமறைமூர்த்தி அடியாருய்யும்பொருட்டு ஆடல்புரியாநின்ற அரும்பதியாமென்றும் அறிவீர்களாக.

குடசாரணியச்சருக்க முற்றிற்று.

## தங்காதலிபுரச் சருக்கம்.

சிவஞானத்தபோதனர்களே! பரங்கருணைத்தடங் கடலாகிய பரமன் அன்புவைத்துள்ள இக்குடசாரணியத்தின் மகிமையினையறிந்து உலகமுய்யும் பொருட்டுச் சர்வ லோகானுக்கிரகியாகிய சாம்பவி தனதுநாயகனைப் பூசைசெய்யக்கருதிக் குற்றமற்ற வில்வம், தாமரை, செங்நெய்தல், கருநெய்தல், மல்லிகை, வெட்சி, புன்னை, அரலி, செவ்வரத்தை, மாதுளை, மந்தாரை, கோங்கு, இலவுமுதலிய மலர்களென்னு மிவைகளைக் கொய்துவந்து, பால், தயிர், நெய், தேன், பஞ்சாமிர்தம், இளநீர், சந்தனம், சுத்தோதக முதலியவற்றால் அபிஷேகம்புரிந்து பட்டுப்பரிவட்டமும், இரத்தினாபரணங்களு மணிந்து அலங்கரித்துத் தாம் முன்புகொண்டுவந்த அழகியமலர்களைப்புனைந்து பலவகைப்பட்ட பழவர்க்கங்களையுஞ்சித்திரான்னங்களையும் பிறபொருள்களையு நிவேதித்து, தாம்பூலம், நீராஞ்சனம், சத்திரம், சாமரம், இருத்தம, இதமுதலாகிய சகலவுபசாரங்களுஞ்செய்து அருச்சித்துத்தோத்திரஞ்செய்து வணங்கினார். அம்மையார் செய்த வப்பூசையினைக்கண்டு கருணைபொங்கிக் கண்ணுதல்

மூர்த்தியானவர் மணவாளக் கோலத்துடன்காட்சிதந்து எந்தங்காதலியே! என்றழைத்துத் தனதுபாகத்தில் வைத்துக்கொண்டுசிவலிங்கத்துள்மறைந்தனர். இதனால்தங்காதலிபுரமெனவு மித்தலத்திற்கொருபெயர்வாய்ந்தது. பின் னம்மையார் விருப்பத்தின்படி இத்தலத்தினைத்தரிசிப்பார் தங்கள் துன்பநீங்கி நினைத்தவெலாமடையவரங்கள் தந்தனர். இவ்வருங் காட்சியினைக்கண்ட வேதங்கள் பல்லாயிர முகங்களைக்கொண்டு தோத்திரஞ்செய்தன. தேவர்கள் கற்பகமலர்களை வாரிவாரிவீசினர். முனிவர்பலருமங்குவந்து அப்பெருமான்றிருவருளை வியந்து வியந்து சென்றனர் என்று சொல்லிப்பின்னுஞ் சொல்லுகின்றார்.

தங்காதலிபுரச்சருக்க முற்றிற்று.

---

## அபயபுரச்சருக்கம்.

---

சிவாக்கிர யோகிகளே! முன்பொரு காலத்தில் பொன், வெள்ளி, இரும்பு இவைகளால் நியமிக்கப்பட்ட மூன்று கோட்டைக ளிருந்தன. அக்கோட்டைகளில் புஜபல பராக்கிரம சாலிகளாயிருந்த அசுரர்கள்

செய்யுங் கொடுமைகளைச் சகியாத தேவர்கள் இந்திரனிடத்திற் சென்று முறையிட, அவ்விந்திரன் பிரமனிடத்தி லோடிக்கூற, அப்பிரமன் நாராயணனிடத்திற்சென்றுகூற, அந்நாரணனென்ன செய்வேனென மேங்கிச் சொல்லுவார், இந்திரனே! தாரகனென்னு மசுரனுக்கு வித்துன்மாலி, தாரகாக்கன், கமலக்கண்ணன் என மூவர்மைந்தரிருந்தனர். இம்மூவர்களும் பிரமனை நோக்கித் தவஞ்செய்தனர். இவர்கள் தவத்தினுக்குவியந்து பிரமனவர்கள்முன்தோன்றி யுங்கட்கென்னவரவேணடுமென்றனர். அவர்கள் ஆகாயத்திற் சஞ்சரிக்கு மூன்றுகோட்டைகளும், அஷ்டமாசித்திகளும், குபேரனையொத்த செல்வமும், எங்கள் பட்டினங்களிற் பலசுனைகளும், காவிரியும், சேனைகளும், குடிகளும், பிராமணர்களும், பயிர்களும், நந்தவனங்களும், வேள்விகளும் வீதிகளும் அமையவேண்டும்; அன்றியும் வேதங்களும், ஆகமங்களும், புராணங்களும், சிவபூசைகளும், விபூதி வேடமும் இவைமுதலிய வோங்கவேண்டும்; எத்தனையாயிர மாண்டானாலுநாங்க ளழியாவரவேண்டுமென்றனர். அங்ஙனமே தந்தோமென்றுபிரமன்கூறிநீங்கினர். ஆயிரங்கண்ணனே! அவ்வசுரர்கள் விபூதி, உருத்திராட்சம், பஞ்சாட்சரம் மூன்றிலுமிகவிசுவாசமுடையவர்கள்;

ஆகமங்களிற் கூறியபடி ஒழுக்கம் ஆசாரமுடையவர்கள்; சிவபெருமானைப்பூசிக்குஞ் செயலையுடையவர்கள்; சிவதருமசிந்தனையுடையவர்கள்; சிவனடியார்க்கண்டால்சிவமாகப்பாவிப்பவர்கள்; சிவபுராணங்களைக்கிரமமாய்க்கேட்பவர்கள்; சிவபணிசெய்கின்றவர்கள்; சிவநாமங்களையேயுச்சரிக்கின்றவர்கள் ஆதலால் இத்தகையாரைநாம் அழிக்குந்திறமில்லாதவர்களாயிருக்கின்றோம். நாமெல்லோரும் கூடிக் கருணைவள்ளலாகிய கண்ணுதற்பெருமானிடத்திற்கூறி நமது கவலைகளை யொழித்துக்கொள்வோம். கைலைமலைக்கு வம்மின்என்று, எல்லாரையு மழைத்துக்கொண்டு வெள்ளியங்கிரியினை நோக்கிச் செல்லுகையில் எதிரில் திரிபுராதிகள் வரக்கண்டு பயந்து நடுங்கி வாயுலறி என்செய்வோம்! என்செய்வோம்! இனியோடித்தப்பித்துக்கொள்ளுவதற்கு வேறுவழியில்லையே அசுரர்கள் நெருங்கிவிட்டனரே, நமது கூட்டத்தினைக்கண்டால் உடனே நாசமாக்கிவிடுவரோ, இப்போது நாமடைக்கலமாக அடையவேண்டிய இடமியாது என்றுலோசித்து நமது அன்னையாகிய சாம்பவியால் பூசிக்கப்பெற்ற தங்காதலிபுரமே உத்தமமெனவெண்ணி எல்லோருந்திரும்பியோடோடியும்வந்து குடாசரணியஞ்சேர்ந்து இவ்விய லிங்கவடிவத்தைத் தரிசித்து இறைஞ்சிக் கைகளைச்

சிரமேற்கூப்பி யஞ்சலிசெய்து கண்களில் ஆனந்தவருவி சொரிய நெஞ்சநெக்குருக உரோமஞ்சிலிர்ப்ப நாத்தழு தழும்ப, உரைதடுமாறப பரமானந்தபரவசராய் அவர து திருவடித்தாமரைகள் முடியுறவீழ்ந்து, அடியார்க்க டியனே! அன்பருக்கன்பனே! அமரர்தந் தலைவனே! அருட்பெருங்கடலே! அருமறைக்கொழுந்தே! அணு விணுக்கணுவே! அடிமைகளையாண்டருளும் ஆண்டரு ளும்ஐயனே! அடைக்கலம், முப்புரத்தவுணர்கட்குப்ப யந்து அப்பணிவேணியாய்! அடைந்தனம்; என்றிவ்வாறு பலமுறை வணங்கித் துதிசெய்வாராயினர். கருணாநிதி யாகிய சிவபெருமான் இதனைக்கேட்டுத் தேவர்களே! அவ்வசுரர்கள் சிவ விரதங்களுட் சிறந்து விளங்குபவர்; அவர்கள் விரதங்கட்குப் பங்கம்வந்தாலன்றி அவரைவெ ல்ல நாம் துணியோம். அவ்வசுரர்களால் உங்களுக்கு யாதொரு தீங்குமுண்டாகாதபடி இத்தலத்தின்கண் ணே வாழ்வீர்களாக. அவர்கள் இவ்விடம் ஒருபோதும டையார் என்றனர். தேவர்கள் குதூகலித்துப்பெருமான் றிருவடிகளிற் பலமுறைவீழ்ந்து எழுந்து அசுரர்பயமி ன்றி யினிவாழ்க்தோம். நமக்குப்பயத்தைநீக்கி அபயத்

தைத்தந்த இத்தலம். அபயபுரமேயாம்என்றுகூறிச்சுக மேயிருந்தனர்.

அபயபுரச்சருக்க முற்றிற்று.

---

## மாயாபுரிச்சருக்கம்.

சிவகாருணியமுடையவர்களே ! அபயபுரத்திலிரு. ந்த நாரணர் மற்றையதேவர்கள் விருப்பத்தின்படி திரி புராதிகளின் விரதங்களை பங்கஞ்செய்யநினைத்துப்புத்த வேடங்கொண்டுபிடகநூலைக்கையிலேந்தித் திரிபுரங்களி ற்சென்று அக்கோட்டைகளில் வாழ்பவர்களையழைத்து அசுரர்களே ! வேதவிதியெல்லாம் பொய், மோட்ச மெ ன்பது ஒன்றில்லை, எல்லாப்பொருள்களும் ஒருகணத்தி லழிந்துவிடுமென்று மாயாஜாலபோதனைசெய்ய அவர்க ள் எல்லாருமதிமயங்கி அப்புத்தருக்குச் சீடர்களாகி, அவரெடுத்துப்போதிக்கும் பிடகநூலைநம்பித் துன்மார் க்கவழியிற்சென்று சன்மார்க்கமாகியசைவசமயாசாரநெ றிதப்பி இழிவான சமயநெறியிற்றங்கி, விபூதி, உருத்தி ராட்சம், பஞ்சாட்சரம், ஆகமநெறிகளைவிட்டனர். அவ ர்கள் பத்தினிமார்களும் கற்பிழந்து கண்ணூற்கண்டதே

மெய்யென்றும், கதியுண்டென்பதேபொய்யென்றுங்கூறித் தங்களிஷ்டப்படி யுலவித்திரிந்தனர்: தேவர்கள் இவற்றையறிந்து தங்கள் எண்ணம்பழுத்தது என்றுமனமகிழ்ந்து எல்லோருமொருங்குகூடிச்சச்சிதாநந்த சொரூபியாகிய சிவபெருமானின் திருவடிகளைத் தொழுது துதிசெய்துசெந்தாமரைபோலுந் தங்கள்கரங்களைக்குவித்துப் பரிந்துகருணைக்கடலே! கண்ணினுண்மணியே! கைலைப்புண்ணியமே! காக்க! காக்க! நாங்கள் இந்நாள்வரையிலிடர்ப்பட்டோம், புத்தனுடையமாயாஜாலத்தால் மருண்டு அசுரர்தேவரீரை மறந்தனர். அவர்களைக்கொன்று அடியேங்களைக்காத்தருள்கவென்ற சொற்கள் அடியார்க்கெளியராகிய சிவபெருமான்கேட்டுக்குஞ்சிரிப்புக்கொண்டு தேவர்களே! திரிபுரத்தை நாடிச்செல்வதற்கு நமக்கு இரதமுதலியவில்லையே யென்செய்வது என்றனர். அத்திருவாய் மொழியைக்கேட்ட நாரணன்மற்றையதேவர்களுடன் ஆலோசனைசெய்து பூமியொருதேரும், சந்திரசூரியர்கள் இருசக்கரங்களும், நான்குவேதங்கள் நான்குகுதிரைகளும், பிரமதேவன் இரதசாரதியும், மேருமலைவில்லும், ஆதிசேடன் அந்தவில்லிற்பூட்டும்நாணும், மாயவன் பாணமும், மற்றைய தேவர்கள் மற்றக்கருவிகளுமானார்கள். அப்போது சிவபெருமான் யுத்தகோ

லங்கொண்டு திருவிற்கோலத்திற்றங்கி அந்தஇரதத்தின் மேலேற்றி மேருமலையினை வில்லாகவளைத்துத் திருவதிகைசேர்ந்து அம்புதொடுத்துப்புன்னகைசெய்தனர். அப்புன்னகையால் முப்புரங்களும் வெந்து நீறாய்விட்டன. புத்தனதுமாய்கையிற் சிறிதுமயங்காது சிவபூசையினைக்கைவிடாது வாழ்ந்த அசுரர் தலைவர்களாகிய மூவர்கள் மாத்திரம் யாதொரு தீமையுமடையப்பெறாது சிவத்தியானத்துட னின்றனர். தேவர்கள் அர அர சிவ சிவவென ஆரவாரித்தனர். அம்மூன்று அசுரர்களுக்கும்சிவபெருமான் தமது திருக்கோயிலினவாயிலில்காத்திருக்கும்பதவிதந்து, தேவர்கட்கு வேண்டும் வரங்களைக்கொடுத்து அபயபுரமமர்ந்தனர். விண்ணவர் அவரவரிருப்பிடம்போய்ச்சேர்ந்தனர்.

மாயாபுரிச்சருக்க முற்றிற்று.

---

## சோமபுரச்சருக்கம்.

சிவானுபூதிமான்களே! வைகுந்தத்திலெழுந்தருளியிருக்கும் நாராயணமூர்த்தியினிடம் அம்புலியென்னும் ஒருவிஞ்சைமாதுசென்று அருமையான சிலபாடல்களைப்பாடிப்பெற்றவொரு துளவமாலையினையும் ஒருதாமரை

மாலையினையுங்கொண்டுவருகையில் எதிரில்முனிவர்கோ மானாகிய துருவாசரைத்தரிசித்து அம்மாலைகளை அம்முனிவரிடங்கொடுக்க அவரதை வாங்கிக்கொண்டேகுகையில்,எதிரில் ஐராவதயானையின்மீதாரோகணித்துவரும் இந்திரனுக்குக்கொடுத்து ஆசீர்வாதங்கூறினர். அத்தேவேந்திரன் அம்மலர்களைத்தனது வெள்ளையானையின்மத்தகத்தின்மீது அலட்சியமாகவைத்தனன். அவ்வியானை அம்மாலைகளைத்தன்னடியிலிட்டு மிதித்துவிட்டது. இதனைக்கண்ணுற்ற முனிவர்பிரான்கண்டு பதைபதைத்து இவ்விந்திரன் தனக்குண்டாயிருக்கும் செல்வச்செருக்கினாலிங்ஙனஞ்செய்தனன், இவனிறுமாப்பை நாமறியோமென்று கோபித்து இவன் தரித்திரமடையும்படிமூவுலகத்துச்செல்வங்களும் சமுத்திரத்தினிலடையக்கடவது என்று சபித்துச்சென்றனர். இதனால் மாதவரும்தேவரும் வருந்த இந்திரன் பலதுன்பங்களையடைந்து பழையபடி பலசெல்வங்களுடன் மனமகிழ்ந்து வாழ்வதற்கு ஓரு உபாயங்கூறவேண்டுமென்றுபிரமனிடஞ்சென்றுவருந்திக்கேட்கையில், பிரமன் அவனுடனும், தேவர்களுடனும், வைகுண்டத்திற்குப்போய், முனிவர்கள் துதிக்க மாதர்கள் மலரடிவருடக் கருடன் முதலானோர் கைகூப்பித் தொழுதுநிற்கச் சேஷசயனத்தின்மேல் அறிதுயில்

செய்கின்ற நாராயணமூர்த்தியைக்கண்டு நர்த்தமூம்பே றத்துதிசெய்து, 'திருப்பள்ளியிலிருந்து எழுந்தருளும் போது விநயமாகப்பணிந்து அடியேங்கள் பழையபடி செல்வங்களையெல்லாம்பெற உமது சரணமே சரணுகவ் ந்தடைந்தோம். எங்கட்கு அனுகூலமான மார்க்கம்திரு வாய்மலர்ந்தருளவேண்டுமென்று பிரார்த்திக்க அத்திரு மால் நெடுநேரம்யோசித்து, தேவர்களே ! நீங்களினிஅ ஞ்சவேண்டாம், பழைய செல்வங்களையெல்லாமடையும் பொருட்டுத் திருப்பாற்கடலைக் கடைந்து யாவற்றையும் பெருவோமென்றனர். யாவருங்கேட்டுக் களித்துச் சுவா மி! கடலைக்கடைந்து செல்வங்களைப்பெறுவது எப்படி? கருணைசெய்யவேண்டுமெனத் திருமால் தனது திருவுள த்திலெண்ணி மந்தரகிரியை மத்தாகநாட்டி, வாசுகியெ ன்னும்பாம்பை வடமாகப்பூட்டித் திருப்பாற் கடலைக்க டைந்து செல்வம்பெறலாமென்றனர். அதற்கிசைந்துமந் த்ரமலையைத் தேவர்கள் அடியோடே யெடுத்துக் கருட ன்முதுகில்வைக்க அதுகடலிற் கொண்டுவந்துவைத்தது பின்பு அந்தமலையினை விண்டுவாகிய ஆமைதாங்க மத் தாக நிறுத்தி வாசுகியென்னும் பாம்பை வடமாகப்பூ ட்டித்திடங்கொண்டு சுரர்களும், அசுரர்களும் கடையு ம்போது அதில் மூதேவி, சீதேவி, தாணி, சங்கநிதி, பது

மநிதி, பஞ்சதரு, வெள்ளையானையென்னு மைராவதம், உச்சைச்சிரவமென்னும் குதிரை, கவுஸ்துவமணி, அமுதம், சந்திரன், சிந்தாமணி முதலியபலவும் பிறந்தன அவைகளைக்கண்டு தேவரனைவரும் ஆனந்தங்கொண்டு, இன்னமுங்கடையின் இன்னமும் பலபண்டமுண்டாமென்று ஆசைகொண்டு, முன்னிலுமதிகமாக வலிவுகொண்டுகடைய, பாம்புசகிக்கமுடியாமல் வாடிவருந்திவாய் நுரைதள்ளப் பெருமூச்சு விடுதலும், அக்கடலிலிருந்து கொடிய எமனைப்போலும் ஆலகால விஷம் புறப்பட்டு அண்டகடாகமெல்லாந்தகிக்க, வெள்ளைமேனியையுடைய விஷ்ணுஉடல்கறுத்து அன்றுதொட்டுக்கரியன் ஆயினார். பிரமதேவன் பொன்னிறமாறி புகைநிறம்பெற்றார். அஷ்டதிக்குப்பாலர்கள் உருவுமாறினர். அப்போது எல்லோரு மொருங்குசேர்ந்து வேறு புகலிடமின்மையால் அடுத்தவர்களைக் காத்ததெய்வம் ஆபத்துக்காலத்திலெங்கேயெங்கேயென்றுநாடி கைலாசகிரியேயென்று ஓடிக்கால்கள் பின்னலிடும்படி தளர்ந்து நடந்து சுவாமிமலையைப்பணிந்து உள்ளத்துதிக்கு முயர்ஞான சோதியாகிய சிவபெருமானைக் கண்களாரக்கண்டு கைகூப்பித்தொழுது மனங்கரைந்து துதிசெய்ய அவர்களைநோக்கிப்புன்னகைசெய்து நாரணனைப்பார்த்து நாராயணனே! நீங்

களெல்லோரும் வடிவமாறி முகம்வாடிச்சரீரநடுங்கிஇரு க்கிறகாரண மென்னவெனத் திருமால் அஞ்சலிசெய்து பணிந்து விண்ணப்பஞ்செய்கின்றார். ஐயனே ! அஞ்ஞானிகளாகிய நாங்கள் ஆண்டவன்கட்டளையன்றிக் கடலைக் கடைந்தோம் அதில் ஆலகாலவிஷந்தோன்றி எல்லாப பொருள்களையும் சாம்பலாக்கிவிட்டது. பிதாவே ! அவ் விஷத்தினால் மாண்டவர்கள் போகப் பிழைத்தவர்கள் எல்லாந் தடுமாறி உருமாறி இங்கேவந்து சேர்ந்தனம், பெருமானே ! வேறுகதியில்லை, சிறிதுநேரஞ் சென்றால் எல்லாரையும் பாழாக்கிவிடும், ஆண்டவனே ! தாமதியாது கருணைவைத்துக் காத்தருளவேண்டும், நாங்கள்மாண்டுபோவதின்முன்னம் கருணைக்கடலே தயைசெய்ய வேண்டும் அகோ ! அந்த ஆலகாலவிஷம்வேகமாகவந்துகொண்டிருக்கிறது வருவதற்குமுன் கருணைபுரியவேண்டுமென்று பிரார்த்தித்தனர்.முறையிடலும்பெருமான் மனமிரங்கி அஞ்சவேண்டாமென்று அனுக்கிரகஞ் செய்து அருகிலிருந்தசிவகணத்தலைவரொருவனையழைத்து அக்கொடிய விஷத்தினைத்திரட்டி வருவாயென்று கட்டளையிட, அக்கணத்தலைவர் தனதுகரத்தினை நீட்டிஅவ்விஷம் கடுகளவாய்உருண்டு திரண்டு அக்கரத்திலடைந்தது. அதனைப் பெருமானுடைய பொன்மலர்க் கரத்தில்

கொடுக்க அவர்வாங்கித் தேவர்கள் முகம்நோக்கி, தேவர்களே ! இவ்விஷத்தினை நாமுண்ணலாமா ? வீசியெறியலாமா ? என்றவுடன் தேவர்கள் ஐயோ ! ஐயோ ! என்றுகதறி மூர்ச்சையாகிவிட நகைத்து எல்லாஉயிர்களேயும் பெருந்துபெற்றெடுத்த உலகமாதாவாகிய உமையவள் அருட்பார்வைக்குக்காட்டி யமுதாக்கி அங்குஅலறிநின்ற எளிய பிரமவிஷ்ணுக்கள்மேல்கடாட்சம்வைத்துச்சகலலோகமும் பிழைக்கும்படி திருவமுதுசெய்தருளினர், நாராயணன்முதலியோர் ஜயஜய போற்றியென்று ஆரவாரஞ்செய்து எங்கள்மனைவிமார்களின் மாங்கலியத்தைக்காத்த தெய்வமே ! என்றுமனக்கவலைதீர்ந்து மகிழ்வடைந்து அஞ்சலிசெய்து நீலகண்டனே ! நின்மலனே ! நிரஞ்சனனே ! நிராமயனே ! நிர்க்குணனே ! சரணம் ! சரணம் ! என்று துதிசெய்யச் சிவபெருமான் திருவருள்சுரந்து உங்கட்கு வேண்டும்வலிவை யளித்தோம். இனித்திருப்பாற்கடலிலுண்டான செல்வங்களையெல்லாமுங்களதாகக்கொண்டு அமுதுண்டு வாழ்ந்திருங்களென்றனர். அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு திரும்பிவந்து அமுதத்தினையெடுத்து விஷ்ணுவானவர் தேவர்கட்கெல்லாம் பங்கிட வாரம்பித்த மாத்திரத்தில் அக்கடலிலுண்டான சந்திரனென்பவன் தனது முழுகுளிர்ச்சியினையும்

வீசவாரம்பித்தனன். அக்குளிர்ச்சியினைச் சகிக்கமுடியா மல் தேவர்கள் தங்கள் கைகால்கள் கோணிவிட அதனை க்கண்ட அக்கினி தனது முழுசுவாலிப்புடன் வரலும் அவனும் அங்ஙனமே ஆயினன், தேவர்கள் பயந்து இதே து நமக்கு வருவதெல்லாம் இடையூறாகவிருக்கிறதுஎன் றெண்ணி அல்லற்பட்டு அலுத்துவருவாரையாதரிக்கும் அருந்தெய்வம் அபயனுகிய சிவபெருமானே யென்று அவர்பால்சென்றுசந்திரன்செய்யும் தீமையைக்கூற, அம் பிகைசமேதன் அச்சந்திரனைப்பிடித்துத் தனதுசடாபா ரத்திலுள்ள ஒருஉரோமத்திலிழுத்துக்கட்டி யொருபக் கந்தொங்கவிட்டு வைத்தனர். இந்தப்படி பல்லாயிரமா ண்டு தொங்கிக்கொண்டிருந்ததினால் உடனொந்து வருந் திய சந்திரன் கிருபா சமுத்திரமாகிய சிவபெருமானை நோக்கிச் சர்வலோகநாயகனே! என்பிழையைப் பொறு த்தாளவேண்டும், ஏழை யெங்ஙனமித்தனை காலம்வருந் துவேன், சிறியேன்செய்த குற்றத்தைத் திருவுளத்திற் குறியாது ஆண்டருளவேண்டும் எனது ஆண்டவனே! என்று பலவாறு கெஞ்சிப்புலம்ப, தேவதேவன் திருவு ளமிறங்கி, சந்திரனே! நினது சகோதரர்களாகிய தேவ ர்கட்கு இடையூறுசெய்த பெரும்பாவம் நின்னைப்பற்றி யது அதனையொழித்துக் கொள்ளுதற்குப் புண்ணிய

பூமியாகிய பரதகண்டத்துத் தென்னாட்டிலேபலவளங்களையு மிருகரைகளிலுங் கொழித்துச் செல்வங்களைப்பெருக்கிச் சிவனடியார்கட்குதவும் பாலாற்றின் வடக்கிலே புண்ணியந்திரண்ட புண்ணியாவர்த்தமென்னும் பதியிலே தூரத்தே தரிசித்தவர்கட்கும் மோட்சத்தினைக்கொடுக்கும் வேதரூபமாகிய குடசவிருட்சத்தினடியிலே நந்தங்காதலி சமேதராக வெழுந்தருளி யிருக்கின்றோம் அங்கேசென்று பூசிக்கக்கடவாயென்று கட்டவிழ்த்துவிட்டனர்.

சந்திரன் சந்தோஷங்கொண்டு பலதரம் பூமியில விழுந்து எழுந்து எழுந்து பாடியாடிவிடைபெற்றுக்கங்காதரமூர்த்தி கட்டளையிட்டபடி புண்ணியாவர்த்தத்தினுக்குவந்து தனது பெயராலொரு தீர்த்தமுண்டாக்கியதிற்படிந்து எழுந்து விபூதிதரித்து உருத்திராட்சமபூண்டு உலர்ந்த வஸ்திரமுடுத்திப் பஞ்சாட்சர மகாமந்திரத்தினை யுச்சரித்துக் கொண்டேசென்று கோபுரத்தினைவணங்கி ஆலயத்திற் பிரவேசித்து விநாயகரையும், சுப்பிரமணியரையுந் தரிசித்துக்கொண்டு அன்றலர்ந்தமல்லிகை, சாதி, குருக்கை, மகிழ், குவளை, சண்பகம், வில்வமுதலிய நறுமணங்கமழு மலர்களைக்கொய்துவந்துசிவ

லிங்கப்பெருமானைப் பூசித்துத் தேவியாரையும்வணங்கி பபரிவார தேவர்களையும் அர்ச்சித்துச்சிவலிங்கபெருமானுக்கு வேதமந்திர உச்சாடனத்துடன் அபிடேகஞ் செய்து அன்புடன் இருகரங்களையுஞ் சிரமேற் கூப்பி, ஆனந்தக்கண்ணீர் பொழிந்து நின்று சிவசம்போ! சிவசம்போ! மகதேவா! மகதேவா! கருணாநிதியே! கங்காதரா! சங்கரா! உமது திருவடிகளை ஒருபோதுமறவாத வாழ்வுவேண்டும். தேவரீரோ தமியேற்கு உற்றதுணையாம என்று தோத்திரஞ்செய்து தண்டப்போற்கீழ் விழுந்து திருவடிகளைப்பற்றி ஆனந்தக் கண்ணீர்பெருக விருந்தான். அப்பொழுது அடியார்க்கெளியராகிய சிவபிரான் உமாதேவியாருடன்தோன்றிச்சந்திரனே! நீவிரும்பிய வரத்தைக்கேட்குதியென்று திருவாய்மலர்ந்தருளினார். பரமபதியே! நான் தேவரீர் சடாபாரத்திலொருபாங்கரில் வாழும் பெரும் பாக்கியத்தினைத் தந்தருள வேண்டுமென்றவுடன் கிருபைக்கடல் அக்கணமேகிருபைகூர்ந்து சந்திரனைமுடியிற்கொண்டு சந்திரசேகரனாய் விளங்கினார்.

அந்தணர்மணிகாள்! சந்திரனு லுண்டாக்கப்பட்ட அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தால் பின் ஓர்காலத்

தும் பிரேதத்தன்மை யுண்டாகாது. ஒருவமிசத்திலொரு வனேனும் அத்தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்வானாயின் அவ்வமிசத்திற் பிறக்குமனைவரும் மோட்சத்தினை யடைவார்கள். இத்தீர்த்தக்கரையி லொருசிவனடியாருக்கு அன்னதானஞ்செய்தால் கோடிபேருக்கு அன்னமளித்த பலனுண்டாகும். இத்தீர்த்தத்தில் ஏலம், இலவங்கம், விலாமிச்சு முதலிய வாசனாதிரவியங்களைக்கலந்து மகாலிங்கப்பெருமானுக்கு அபிடேகம் செய்யும் நியதியுடையவர் அம்பலத்தாடி மாண்டவனடிநிழலைப் பெற்றுய்வாரென்பது சத்திய மொழியாம்.

சோமபுரச்சருக்க முற்றிற்று.

## பரஞ்சுடர்ப்பதி சருக்கம்.

சைவாசாரத்துல்யர்களே! முன்னொருகிருதயுகத்தில் நான்முகக்கடவுளாகிய பிரமதேவனிடத்திருந்துமுதித்தகறுத்தமேனியனாகிய விருத்திராசுர னென்பவன் பரமேஸ்வரனைவழிபட்டு, எத்தகையவாயுதங்களுந்தனைமேற்படில் அவைகளியாவுந் தூசாப்போம்படி வரமடைந்து முப்புவனங்களி லுள்ளவர்களும் பயங்கொள்ள அனேக யுத்தங்களைச்செய்து செயங்கொண்டுவாழ்ந்துவந்

தனன். இவன் துன்பஞ் சகியாதவர்களாய்த் தேவர்கள் பலரிவனுடன் அநேககாலம் போர்செய்து மேற்கொள்ளாதவராகிப் பரமனருளிய வரத்தினுலிவன் மாயானெனத்தீர்மானித்துச் சகலசாஸ்திர சம்பூரணரான ததீசிமுனிவரிடஞ்சென்று தங்கள்குறைகளையெல்லா மெடுத்துக்கூறி அவர் முதுகென்பினைக்கேட்க, அவரானந்தங்கொண்டு அங்ஙனமே கொள்ளுங்கள் நானடைந்தபேறு யாவர்பெறுவ ரிவ்வுலகிலென்று சந்தோஷித்திருந்தனர். தேவர்கள் முனிவனைக் கொண்டாடிக் காமதேனுவையழைத்து அம்முனிபுங்கவருடைய உடலைநக்கும்படிசெய்தனர். அங்ஙன நக்கவே அவரது தோலெல்லாமழிந்து என்புமாத்திரந் தோன்றிற்று. அப்போது அவரது முதுகென்பினைவாங்கிச்சென்று விருத்திராசுரனைக்கொல்ல அவனிறந்துபிரமகத்தியுருவங்கொண்டு, இந்திரனைமேவி வருத்தவாரம்பித்தது. இதனைக்கண்ணுற்றதேவர்கள் முறையிடக்கேட்ட தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் அப்பிரமகத்தியாகிய பழியினை மண்ணினிலுப்பாகவும், மாதர்களிடத்தில் பூப்பாகவும், நீரில் நுரையாகவும், மரங்களிற் பிசினாகவுமிருக்கச்செய்து அவைகளுக்கு வேறுநன்மைகளும் புரிந்தனர். பின்னர்ஒருவேள்விசெய்யக்கருதி தேவர்கள், முனிவர், யோகர், சித்தர்,

விஞ்சையர், இயக்கரியாவரு மொருங்குகூடி யிருக்கையி
ல், வேதாகமபுராண விதிகாசமுதலிய பலகலைகளிலுங்
கொண்டாடப்பெற்ற மும்மூர்த்திகட்கு முதல்வனுமுழு
முதற்கடவுளாகிய சிவபெருமான் றிருவுருவஞ் சோதி
சொரூபமேயென்பதைத் தேறுவாராயினர். எங்ஙனமெ
னின் சிவபெருமான் அருவமுமல்லர், உருவமுமல்லர்,
அருவுருவமுமல்லர், அவர் எல்லாப்பொருளுங் கரைந்
தவிடத்திலே யுதிப்ப தொன்றாகையால், எல்லாப்பொ
ருளுந்தானுயொன்று யிருப்பவருமன்று, தன்னிடத்தி
லே சுட்டறவிளைகின்ற அர்த்தமாகையினுலே யிரண்டா
யிருப்பவருமன்று, வாக்குமனதீதமா யிருப்பதொன்று
கையினுலே பிரத்தியட்சமா யிருப்பவருமன்று, ஞான
வான்களுக்கு ஞானயோகத்தின் முதிர்ச்சியிலே பரமா
னந்தத்தையளித்து நிற்கையினுலே யில்லாதவருமன்று,
ஆன்மபோதமிறந்தாற்கூடும் பொருளாகையாலே ஆன்
மாக்கணன்று நீதென்று சுட்டப்படுபவருமன்று, அநாதி
யேதொடங்கி யின்றளவுநிலையான பாசஞானமு மவரன்
று, நானேபிரமமென்று அகங்கரிக்கின்ற பசுஞானமுமவ
ரன்றி, பாசஞானத்தையும், பசுஞானத்தையு முடைய
வான்மாவுமவரன்று, அறிவிற்கறிவாய்நிற்கின்ற ஞானமு
மவரன்று, ஆதியுமவரன்று, அந்தமுமவரன்று, இத்த

கையாகிய சச்சிதானந்தரூபியை எங்ஙனநாம்பாவிப்பது? கருவிகளோடுங் கூடிநின்று பாவனைசெய்வதெனிற் சகலமாய்ப்போகலானும், கருவிகளை நீங்கிநின்று பாவிப்பதெனின் அப்பொழுது கேவலம்வந்துதலைப்படுமாகலானும், இரண்டுமின்றிப் பாவிபபதெனின், அஃதநிர்வசனீயமெனப்பட்டுப் பாழாய்முடியுமாகலானும், அவ்வாறன்றிப்பாவனைக் கெய்தாத பொருளையெய்தியதாகவைத்துப் பாவிக்கும்பொருள் யானென்று தன்மேல்வைத்துப் பாவிப்பதென்னில் அதனுலவதோர் பயனில்லையாகலானும், அப்பாவனை யனைத்தும் நாடகமாத்திரையேயாமாகலான் மேற்கூறியவாறு அங்கியமாய்நின்று அப்பரம்பரன் அருளாற்காண்டலேபாவனையாகும். அவ்வருளோ சத்தியாகு மச்சத்தியைப்பூசிக்கின் அப்பெருமானினுண்மையாகியசோதிசொரூபத்தினைக்காணலாம். அச்சத்தியினைத் தவத்தாலன்றித் தரிசிக்க முடியாது, அத்தவம் சீக்கிரத்திற்கைகூடி வரத்தக்கதலமெங்குளது எனஙாடி அதுபுண்ணியமொன்றுகோடியாய்விரிந்து கோடிபாதகங்களைப் போக்கும் சோமபுரமேயென வெண்ணி அவ்விடஞ்சேர்ந்து சோமதீர்த்தத்தில் மூழ்கிப் புண்ணியலிங்கத்தினைப்பணிந்து கிழக்குஎல்லையிலொரு ஆசிரமஞ்செய்து அதிலிருந்துசாம்பவியாகிய சத்தியினை

மனத்திலிருத்தி நீரிடைமூழ்கி நெருப்பினிருப்பினேயொத்துக்கூர்மையான வொருஞ்சியின்மேலோர் விரலூன்றிக்கொண்டுநின்றும், பூமியிலொருகையினையூன்றி ஒருபாதத்தை யாகாயத்திற்றூக்கி உணவுசிறிதுமின்றி யருந்தவஞ்செய்துவந்தனர். பராசத்தியும், இச்சாசத்தியும், ஞானசத்தியும், கிரியாதானசத்தியுமான உலகமாதாவாகிய அன்னையார் அவர்கள்முன்தோன்றி யுங்கட்குவேண்டியதென்னவென்று கேட்டனர். தேவர்கள் அம்மையாரைப்பணிந்து சாம்பவியே! அறுதிமுத்த சித்தனாகிய சிவபெருமானுடைய வுண்மைகாண வாசைகொண்டனமென்றியம்பினர். பார்வதியார் குடசவிருட்சத்தினடியிலிருக்கும் திவ்வியசிவலிங்க ரூபத்தினைவணங்கி எனது அருமைநாயகனே! இத்தவமுனிவர் தரிசிக்கும்பொருட்டுத் தேவரீருடைய உண்மைவடிவினைக்காட்டி யருளவேண்டுமென்றனர். அக்கணமே ஆனந்தசொரூபமாகிய அவ்விலிங்கத்தினின்றும் பலகோடிசூரிய ரேககாலத்திலுதித்தாலென்ன அங்கிங்கெனாதபடி யெங்கும்பிரகாசமயமான ஒருபரஞ்சோதியாய்க் காட்சிதந்தருளினர். மாதவர்கள்கண்டு வெருண்டனர். அம்மையார் அவர்களைக்கூட்டி முனிவர்களே! இதோநீங்கள்விரும்பிய பரஞ்சோதியென்றனர். அவர்கள் தங்கள் கண்களாரத் தரிசித்துத்

திருவருளைப்பெற்று அவனதுசிவானந்தப் பெருவாரியில் இரண்டறக்கலந்து சிவசாயுச்சியவீட்டின் பேறாகிய சிவமாந்தன்மைப்பெருவாழ்வு பெறுதற்கு ஏதுவாகிய சிவயோகத்தினை யினிதுசெய்துவாழ்ந்தார்கள். பரஞ்சோதிரூபமாகத் தரிசனங்கொடுத்ததலம் ஈக்காடெனப்பெயர்பெறும். அச்சோதிசொரூபமானது தனது கோடிசூரியப்பிரகாச மொடுங்கமீண்டும் குடசவிருட்ச நிழலிலேயிருக்கும் அருட்குறியாகிய சிவலிங்கத்தினுள் மறைந்தனர். அன்றுமுத லச்சிவலிங்கப்பெருமானுக்குப் பரஞ்சுடரெனப்பெயர்வழங்கியது. வேள்விக்கென்று வெதிரிகாசிரமநீங்கி யித்தலம்வந்து தவம்புரிந்து அம்மையப்பன் றரிசனங்கண்டு வாழ்ந்தவர்கள் யாவரெனில், சாலிகோத்திரன், பிருகு, பரத்துவாசன், சவுனகன், உரோமசன், காசிபன், வசிட்டன், நாரதன், சுகன், மார்க்கண்டன், எழுகூன், ததீசி, கலைக்கோட்டு, உபமனியன், சனற்குமாரன் விசுவாமித்திரன், வியாசர் முதலியவர்களாம். இவரங்கங் கிருந்தவர்கள் பேரால் ஊர்விளங்குவதுமுண்டு. இத்தலத்திற்கு இதனால் பரஞ்சுடர்ப்பதி யெனவாய்த்தது என்றனர்.

பரஞ்சுடர்ப்பதிசருக்க முற்றிற்று.

## மங்கலாபுரச்சருக்கம்.

சிவயோகிகளே ! கற்றவர்களெல்லாராலும்பரவிப புகழ்ப்பெற்ற பெருமையுடன்கூடிய கடம்பமாவனத்தில் *வாழும் முனிவர்களுக்குத் தலைமைவாய்ந்தவரும், பல கலையாகமவேத புராணங்களையுணர்ந்தவரும், பிரமனிடத்துதித்தவருமாகிய கௌசிகமுனிவர் பழைமையாகிய வேதநெறியிற்சிறிதும் வழாது பன்னசாலையிற்சின்னாள் தங்கிக் கங்கையாதி புண்ணியநதிகளிலாடுதற்கெணணிப்பிரயாணபபட்டுப் பரஞ்சுடர்தோன்றிய ஈக்காட்டிற்குச்சமீபித்து வருகையில் பசியினாலேயும், தாகவேட்கையாலும், சூரியவெப்பத்தினாலு மிகவாடிச் சகியாதவனாகி வருத்தமடைய சூரியன் அஸ்தமித்தனன். இருளெங்கும்வந்து சூழ்ந்துகொண்டது. பாம்புகள் தங்கள்மாணிக்கக்கற்களைக்கக்கியவைகளின் பிரகாசத்தில் இரைதேடவாரம்பித்தன. பேய்களும்படுத்து நித்திரைசெய்யுபடுச்சாமமாயிற்று. அப்போதுமுனிவர் அவ்வனத்தின்செடிகளின்மறைகணெருங்கிய வொருகுகையிற்சென்றுகொந்து உடல்வருந்தித் தூக்கமின்றி யெண்ணுதனவெல்லாமெண்ணிச் சிந்தைதளர்ந்து தங்கினர். அப்போது பஞ்சாட்சரசொரூபியாகிய பரஞ்சுடர்திருவருளால்ஒருபூதம்

* இவ்வனம் திருப்பாசூருக்குச் சமீபத்திலுள்ளது.

புலையன் வடிவினைக்கொண்டு சமீபத்தில்வர முனிவர தனைக்கண்டு நீயரென்றனர். நானிந்தவனத்தில் வாழுப வனீயாரென்று பூதங்கேட்க, முனிவன்றன துவரலாற்றி னைக்கூறி நானித்திரைசெய்யு மளவுமெனது உடலைப் பாதுகாத்துவரக் கடவையென்று தூங்கிக்கொண்டிருந் தனர். அச்சமயத்தில் பூதம அம்முனிவரை யெடுத்து க்கொண்டுபோய் அவருணரா வண்ணம் ஒரு மாளி கையில் மலரமளியின்மீது வளர்த்திவிட்டுத் தான் நீர் கி ழங்கு காய் பழமுதலியகொண்டுவரப்போயினது, முநி வர்விழித்துக்கொண்டுபார்த்து இஃதென்ன! இத்தகைய மாளிகையும் மஞ்சமு நமக்கெவ்வாறுவந்தது நமதுகிரு பாசமுத்திரமாகிய சிவபெருமான் றிருவருட்செயலோ? நாங்கண்ட இருளன் காரியமோ? என்று நினைத்துக் கொண்டிருக்கையில் பூதம், பழமுதலிய கொண்டுவந்து முனிவர்முன்வைத்துப் பெரியோரே! இவற்றைப்புசித் து உமது வருத்தநீங்குமென்றது. இதுவும்பெருமானரு ளேயென்று முனிவ ரவைகளையுண்டு இளைப்பாறி யிருந் து சற்று அவ்வமளியின் சுகத்தினைக்கண்டதன்மேனி த்திரை செய்தனர். அப்போது அப்பூதம் அவ்விடம் விட்டுப்போய் ஒருபுலைச்சியை மிரட்டி யுடன்கொண்டு சென்று முனிவருக்குப் பாதம் பிடிக்கும்படிப் பகர்ந்து

போய்விட்டது. அப்புலைச்சிமுனிவரது பாதங்களைத்த டவிக்கொண்டே பக்கத்திற்படுத்து நித்திரைசெய்துவிட் டனள். முனிவரொழுந்து சமீபத்தி னித்திரா செய்து கொண்டிருப்பவளைப்பார்த்து நீயாரென்றுகேட்க, நான் புலைச்சியென்று, நடந்தவற்றைக்கூற, முனிவர் கேட்டு அந்தோ! இதற்கென்செய்வது இவளுடன்சயனித்தபா வமெவ்வாறுதொலையும் என்று விசனப்பட்டுக்கொண் டிருக்கையில் சூரியனுதயமாயினன். முனிவர்முக்காலத் து வருத்தமானங்களையுந் தனதுஞானதிருஷ்டியா லாய் ந்து தேர்ந்து ஓ! ஓ! நமக்கு இத்தலத்தில் திருவருள் செய்யும்பொருட்டு முக்குணங்கடந்தமுதல்வனாகியசிவ பெருமான்செய்த திருவிளையாட்டென எண்ணி யினிய வனருள்வழிநின் றிடுதலேநன்று, இம்மையில் ஆகாமிய மேருமலும், மறுமையின் பிராரத்துவத்திற் கேதுவா கிய சஞ்சிதமொழியவும் சன்மார்க்க நெறியாகிய சிவபூ சையேதக்கது என்று சிந்தைகொண்டிருக்கையில், முன் னே யொரு தீர்த்தந்தோன்றியது. முனிவர் அத்தீர்த்த த்தினைக்கண்டு அதிசயித்துக்கொண்டிருக்கையில்,முனி வ! நீ நினைத்திருந்த கங்கையாதிதீர்த்தங்களிலெல்லாம் ஆடவேண்டாம். இதுமங்கலமாதீர்த்தம் இதில்நீபடிந்து மங்கலமாகி மங்கலமுனியென்னும் பெயர் பெறுக, இவ்

வனத்திலிருக்கும் பரஞ்சுடர் நாமென்ற அசரீரி ஆகாய த்திலுண்டானது. முனிவர் அத்தடாகத்தில் முழுகியெ ழுந்து மங்கலமா முனியெனும் பெயர் பெற்றுத் தேவ தேவனைத்தேடப் பெருமான்றிருவிளையாட்டாக வருமை காட்டி வெளிப்படாதிருக்க, முனிவர்மெலிந்துபெருமா னே இங்கிருப்போமென்று முன்னர்கூறி இப்போது வானில் மறைதனீதியோ? நாமின்று தவஞ்செய்து கா ண்போமென, அக்கினிவளர்த்தி, அதன்மத்தியிற் செப பூசிகாட்டி அதனுனியிற்றனது அடியினங்குட்ட விரலை யூன்றி நிமிர்ந்து மற்றொரு அடியைமேலே தூக்கி இரு கரங்களையு முடியிற்குவித்து, வாயுவுடனே மூன்றுகுண ங்களையும், நான்குகரணங்களையும், ஐந்துபுலன்களையும், அடக்கி யிச்சையாதிய வொழித்து உலகமேழுங்கொண் டாட வெண்மலர்கள் கொண்டறிவிலருசித்துக் கொண் டிருந்தனர். பரமதயாநிதியாகிய பரசிவம் தனது பரசி வையுடனே வெளிவந்து முனிவ! நின் றவங்கண்டு விய ந்தேம், விருப்பங்கொண்டேம், நினக்குவேண்டிய வரங் களைக் கேட்கக்கடவா யென்றனர். முனிவர்பூமியில்விழு ந்து தொழுதுபோற்றி மனமுருகி மறைமொழிகளால் வழுத்தி மெய்ம்மகிழ்ப்புப உனங்களிந்துசொல்லலுற்றனர். சந்திரசூடாதாரியாகிய சிவபெருமானே! எளியேனுக்கு

யாதொரு விருப்பமு மில்லை அன்புடனே சிவபூசை யொன்றே செய்து மகிழவேண்டும், என்றனர். கண்ணு தன்மூர்த்தி கேட்டுக்கருணைகூர்ந்து அன்ப! இவ்வனத் திலொரு குடசவிருட்சத்தின்கீழ் இலிங்கவடிவமாய் நா மெழுந்தருளியிருக்கின்றோம், பரிவுடன்அருச்சனைசெய் என்றுகூறிமறைந்தனர். முனிவர் அடியற்றமரம்போல கீழ்விழுந்து உய்ந்தேன்! உய்ந்தேன்! என்று அங்குமி ங்கு மோடிப்பாடிச் சிவலிங்கப்பெருமான்மீதுஒருபடம் விதானஞ்செய்து, மஞ்சனம், புதுமலர்கள் கொண்டுவந் து சைவாகமங்களிற் குறித்தபடியே சோடசோபசாரங் களுடன் ஒருநாளுந்தவறாது நாளுக்குநா லன்புதழைத் தோங்கப் பன்னெடுநாள் பூசைசெய்து இப்பொய் வாழ் க்கைக்குரிய விவ்வுடலைமாற்றிடுவையென்று பல்காலுமி றைஞ்சிப்பூசித்து வேததோத்திரங்கள்செய்துவந்தனர். அவர்முனமொ ருநாள் சிவபெருமான்சோதிப்பிழம்பாய்க் காட்சிதந்தனர். ஐம்புலனின் அவாவையறுத்தகௌசி கமுனிவர் அச்சோதியுண்மறைந்தனர். அமரர் முனிவரி யாரும் மென்மலர்பெய்து விசும்பிலார்த்தனர். இம்மங்க லமாமுனி பூசித்தகாரணத்தால் இத்தலத்திற்கு மங்கல

மாபுரியென வொருபெயரும் வந்ததென வறியக்கடவீர் என்றனர்.

மங்கலாபுரிச்சருக்க முற்றிற்று.

---

## மால்வினைநாசச் சருக்கம்.

சைவவேதியர்களே! முன்னொருகாலத்தில் உலகசங்காரமுடிந்தவுடன், பவத்தையொழிக்கும் பரமபொருளாகிய சிவபெருமான் றிருவருளினால் அப்பெருமானது மாயாசத்தியி னிடத்திருந்து மால் அவதரித்து யான் செய்யவேண்டுவது யாதென்று வினவ, திருமாலே! இவ்வுலகத்தினைக் காக்குந்தொழிலை வகிக்கக்கடவையென்று கட்டளையிட்டு அவருக்கு மகாமந்திர மொன்றினையும் பெருமான் உபதேசித்தருளினர். அத்தெய்வீக மந்திரத்தினையுச்சரித்துக்கொண்டே அந்நாரணர் திருப்பாற்கடலி னித்திரைசெய்துகொண்டிருந்தனர். அவருந்தியினின்று மொருதாமரை முளைத்து அனேகவருடகாலமலராது மொக்காகவேயிருந்துகொண்டிருந்தது. இங்ஙனமிருக்க உலகசங்காரகர்த்தாவாகிய புருத்திரமூர்த்தியினெற்றியில் விளங்கும் அக்கினிவிழியினின்றும் விசுவகன்மனென னுமொருமுனிவன்பிறந்தான். அவர் யான்செய்

வதேது என்றுவினவ அவ்வுருத்திரர் அவருக்கு மந்திரங்களைன்கு உபதேசித்துச் செபஞ்செய்து கொண்டிருக்கக்கடவாயென்று கட்டளையிட்டனர். அங்ஙனமவாசெய்துவருகையில் அவரிடமிருந்து மனு, மயன், துவட்டா, விசுவகன்மா வென்னால்வர்களுதித்தனர். அந்நால்வர்களுந்தமது தந்தையைநோக்கி, நாங்கள் செய்வது யாது என்றுகேட்க விசுவகன்மன் அந்நால்வர்கட்கு நான்குமந்திரங்களை யுபதேசித்து விண்டுவினுந்தியின்முளைத்த தாமரையின் நான்குபக்கங்களிலுமிருந்து செபிக்கவென்றனர். அங்ஙனமந்நால்வர்களுஞ் செபித்துவருகையில் அத்தாமரைமலர்ந்தது. அதினின்றும்கனகமயமானபிரமா பிறந்தனர். அப்பிரமன் நான்குதிக்கினும் பார்த்து நமக்கெதிராவார் யாராயினு மிங்குண்டோவெனச் செருக்கடைந்தமாத்திரத்தில், அப்பிரமனிரண்டுபக்கங்களினின்றும் இரண்டு அசுரர்கள் கறுத்தமேனியாகளாய், பெருந்திறலுடையவர்களாய், பிறைபோலும் பற்களையுடையவர்களாய், கருங்கடலாழமுங் கணைக்கா லளவினராய்த் தோன்றி மதுகயிடவனெனும் பெயர்களையுடைய அவர்கள் அந்தப் பிரமனைப் போருக்கழைக்க அவரஞ்சி அசுரர்களே! உங்களிடம் போர்செய்யவல்லவர் திருப்பாற்கடலி னித்திரைசெய்கின்றார் அவ்விடம்போகவென்

றனர். கேட்டவவர்கள் அவ்விடஞ்சென்று கரியவ்னைக் கண்டு துயிலெழுப்பிச் சண்டைக்கு அழைக்கஅவ்விண்டுவுமெழுந்து அவர்களுட னாயிரம்வருடஞ் சண்டைசெய்தும் அவர்கள் தோல்வியடையாதிருத்தலைக்கண்டு அவர்களை நோக்கிச்சொல்லுவாராயினர். வீரர்களே! நீங்கள்யுத்தஞ்செய்வதில் மிக்கவல்லவராகக் காணப்படுகின்றீர், உம்மைநான் மெச்சினேன், உங்கட்கு வேண்டும்வரங்களைக் கேட்பீர்களாகவென்றனர். அசுரர்கள் குலுங்க குலுங்க நகைத்து விண்டுவே! உனது வார்த்தைமிகவழகாயிருக்கிறது, முன்பின்பார்த்துப் பேசுவாயாக, யாராகிலுமிந்தவார்த்தையைக் கேட்டா ரையார்களா? எம்மோடு யுத்தஞ்செய வல்லமை சிறிதுமில்லாத நீயா வரங்கொடுக்கத் துணிந்தனை. நேர்த்தி! நேர்த்தி! இச்சமயம் நீதப்பிப்பிழைத்து ஓடிப்போவதற்காக ஒருதந்திரமெடுத்தாய்போலும். அழகு! அழகு! உனக்குவேண்டுமானல் நாம் வரங்களைத் தருகின்றோம் பெற்றுக்கொள் என்றனர். திருமால் கேட்டு இதுமிகநல்ல சமயமெனவெண்ணி, நீங்களெனக்கு உண்மையாக வரந்தரவல்லீரோவென்றனர். ஆம்தருவோம் தவறிலெங்களைக் காட்டிலு மீனர்களொருவருமில்லை இதற்குச்சாட்சி யிப்பிரமனேயென் றசுரர்கூறவே, அது தெரிந்த விஷ்ணு,

அசுரர்களே! நீங்கள் என்கையாலிறந்துபோகத் தக்கவர மருளவேண்டுமென்றனர். அவர்கள் திடுக்கிட்டு, ஓ! நாமா லோசியாது சொல்லிவிட்டனம். இனிமறுபபதிற்பிரயோ சனமில்லையென்றுநினைத்து நினது இஷ்டப்படியேசெய் துகொள்ளக்கடவாயெனறு கூறிய மாத்திரத்தில், அவா களிருவரையும் விஷ்ணுமூர்த்தி தனதுங்கங்களாற் பிழி ந்தெறிந்தனர். அவர்கள் இரத்தங்கடல்போற்பரவியது. அவர்கள்மேதை உலகமெங்கு மூடியது. அதனாலுலகி ற்கு மேதினி யெனவும் பெயர்வந்தது. அவர்களிறந்தபட மாயையாற் சூக்குமரூபந்தாங்கி வேகமாக வெங்குந்திரி ந்து தங்களைத்தந்திரத்தாற்கொன்ற மாயனை மறுபடியு நாடி அவர் தூங்குகையில் அவர்காதுகளினுழைந்துஉரு வெடுத்துவெளிவந்து, அனேகமானவருந்தவங்கள்செய் து பிரமனிடத்திற் பலவரங்களைப்பெற்று மதுபுரமென ஞெரு பட்டினமுண்டாக்கி யதிற்பல சேனைசமுத்திரஞ் சூழவாழ்ந்து, விண்ணுலகத்து இந்திரனதியரைச்செயி த்துத் திருபபாற்கடலிற்சென்று, முன்பு எங்களைக்கொ ன றுவிட்டதாக விறுமாப்படைந்திருக்கு நாரணனே! யுத்தத்திற்குவாவென்றழைக்க விஷ்ணுமூர்த்தியுங் கோ பித்துத் தனதுபஞ்சாயுதங்களுடனவெளிவந்து சாரங்க

மென்னும் வில்லினை வளைத்துப் பலவம்புமாரி பெய்து ஆயிரம்வருடம்போர்புரிந்தும், அவர்கள்தோல்வியடையாதிருப்பதைக்கண்டு தான்கைலாசபதியின்றிருவடியிற் கண்மலரிட்டுஅருசித்துப்பெற்றசக்கிராயுதத்தினைபபூசித்து அவுணர்கள்மேலேவ,அது அவர்களைத்தொடர்ந்து எங்குஓடினும், எங்குபதுங்கினும் விடாது வருதலைககண்டு ஈக்காட்டில்வந்து மறைந்தனர். உடனேயதுஅங்கும்வந்துஅவர்களைப்பிளந்துகொன்றது. அவர்கள்பிரமகத்திவிஷ்ணுமூர்த்தியைபபற்றியது.அதைக்கண்டசாலிகோத்திர முனிவரொருவர் அவரைநோக்கிப பெருமானே!இதோதோன்றுகிறஇருதயதாபநாசனியென்னுந்தீர்த்தத்தில்முழுகி நினது பிரமகத்தியினை நீக்கிக்கொள்வாயென்றனர். அவரங்ஙனமேசெய்து அகமகிழ்ந்தமாதவனுடன்முனிவரறைவர். இத்தலந்திவ்யமானது.இதிலியானும்வைகச் சித்தங்கொண்டிருக்கின்றேன். நீரும் அவ்வுளுறை யென்றனர். நாரணர் *எவ்வுள்என்றுகேட்டு ஆசையுடன் அவ்விடத்து நித்திரை செய்துகொண்டிருந்தனர். அங்கிறந்துபோன தானவர்கள் மறுபடியுஞ்சூக்குமரூபங்கொண்டுவிஷ்ணுவின்மூக்கினுழைந்து அவர்இரத்தத்தினையுறிஞ்சுதலும் அவரெழுந்தனர், உடனேயசுரரோ

* எவ்வுள் என்றது திருவெவ்வளூரானாயது.

டக்கண்டு சக்கிராயுதத்தைப்பிரயோகித்து அவனையழி த்தனர். பின்னுமவர்பிரமகத்தியாய்க்கோரரூபங்கொண் டோரரணார்முன்வந்து அவனைச்சூழ்ந்துகொண்டு ஓய்நார ணனே! நீ எம்மை மூன்றுதரம் கொன்றும், இதோவந் தோ மறுபடியுஞ் சண்டைக்கு வாவென்னும், உடமெ ன்னும், மார்பைத்தட்டும், ஆரவாரிக்கும், உதட்டைமடி க்கும், ஈற்றினைக்கடிக்கும், குப்புற்றுவிழும், விரைந்தோ டும், மீட்டும்வரும், பொங்கியழும், அட்டகாசஞ்செய்யு ம், சீறுகிற்கும், என்முன்னிற்க வல்லவ ரெவரடாவென னும், இவனையின்று மென்றுதின்று போவேனென்னும், இதனைக்கண்ணுற்ற திருமால் பகற்காலத்துச் சந்திரன போலமுகம்வாடித் தான்செய்வ தின்னதெனத் தோன் றாது அச்சமுற்று எட்டுத்திக்குகளிலும் விழித்துவிழி த்துப்பார்த்துச் சித்திரப்பதுமைபோலே நின்றனர். இ தைக்கண்ணுற்ற சாந்தகுணசீலராகிய சாலிகோத்திரமு னிவர் அந்நாரணர் முகத்தினைநோக்கிக் கூறுவார். மாத வனே! அஞ்சவேண்டாம், உலகமனைத்தும்உய்யுமபொ ருட்டு ஒருபெருங்கடவுள், உமார்த்தசரீர திவ்விய மங் கள விக்கிரக தேசோரூபமாய்ச் சகளீகரித்த பஞ்சசாதா க்கியத்துள் கன்மசாதாக்கியராகிய சிவலிங்கப்பெருமா னைப்பூசித்தாலன்றி இடபிரமகத்தி நீங்காது. இப்பூசை

யாம உத்தமப்புண்ணிய நலங்களிற் செய்யிற் சீக்கிரத்திற் பலனுண்டாம. அந்தனமையானவருமைத்தலம் இதோ நமக்குச் சமீபத்திலுள்ள மங்கலபுரியேயாம். அவ்விடஞ் சீக்கிரஞ்சென்று பூசிப்பையாக வென்றனர். கேட்டதிருமால அவ்விடஞ்சென்று பசுபதிவிரதம்பூண்டு, சோமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து நித்திய அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தேகமெல்லாந் திருநீறுபூசி, நெற்றியில் விபூதி திரிபுண்டரமாக விளங்கக் கண்ட முதலிய உறுப்புகளில் உருத்திராட்சமாலைதரித்து ஒழுக்கத்திற் சிறிதுந் தவறுமல பூசைக்குவேண்டிய உபகரணங்களாகிய பீதாம்பரம, இரத்தினாபரணம், சந்தனம், திருமஞ்சனம், தூபம், திருப்பள்ளித்தாமம், தீபம், பஞ்சகவ்வியம, கனிகள, தேன, திருவமுது சேகரித்துச் சிவாகமப்படி ஆவாகனம, தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்திரை, பாத்தியம், ஆசமனீயம, அர்க்கியம், புட்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பானீயம், ஆராத்திரிகை, சபசர்ப்பணையாஞ்சோடசோபசாரஞ்செய்து, உரைதடுமாற, என்புநெக்குருக, உடலெல்லா மென்மயிர்ப்பொடிப்ப, ஆனந்தக்கண்ணீர் பெருக அஞ்சலித்து, மோட்சவிதாயமானபஞ்சாக்கரஞ் செபித்து, ஆயிரந் திருநாமங்களை யெடுத்துச்சொல்லி

அருச்சனைபண்ணித்துதிசெய்து பேரன்புவளர்ந்தோங்க த்தொழுது, அப்பனே ! சரணம், அண்ணலே !சரணம், அங்கணா ! சரணம், அரசே ! சரணம், ஐயனே ! சரணம் அண்ணா ! சரணம், அருமறைப்பொருளின் அகப்பொருளேசரணம், மறைகளனைத்தினிலு மறைந்திருக்குமா மணியேசரணம், முனிவர்போற்றுமூவாமுதல்வனே சரணம், முத்தியளிக்கும் முக்கட்பரமனே சரணம், கலிமலங்கழிக்குங்கற்பகக்கொழுந்தேசரணம், போகமளிக்கும் போதப்பொருளே சரணம், இராஜ இராஜேஸ்வரா அடைக்கலம், அடைக்கலம் என்றமாத்திரத்தில், அந்தரதுந்துபிமுழங்கவும், அமரர்கள் புஷ்பமாரி பொழியவும், உருத்திரகணிகையர் வெண்சாமரைவீசவும், கந்தருவா பாடி வீரப்பிரதாபங்களை யெடுத்துச் சொல்லவும், ஞானசனந்தர் முதலான பெரியோர்கள் இருபக்கத்திலுமிருந்து துதிசெய்யவும், அஷ்டதிக்குப்பாலகர் எமது ஐயன்றிருவடிகளைமுடிமீது தாங்கிவரவும், பச்சிளங்கொடியாகிய பார்வதி சமேதராய், விநாயகமூர்த்தி, சுப்பிரமணியசுவாமி, திருநந்திதேவர், முதலானவர்கள் புடைசூழ்ந்துவர இடபவாகனத்தின்மீது அம்பரத்திலொரு அலங்காரமாகச் சிவபெருமான் காட்சி கொடுத்தருளினர். கண்ட விட்டுணுவானவர் பேரன்புடையவராகித் தேக

மெலாமுரோமம் சிலிர்க்கச் சிரசின்மேல்கைகளைக்குவித்துக்கொண்டு நாவுகுழறிச் சொற்கள்தடுமாற, ஆனந்தக் கடலில்விழுந்து ஆடிப் பெருங்காற்றில் வாழைமரஞ்சாய்வதுபோல பூமியில்விழுந்து, பணிந்தனர். சிவபெருமான்வாராய் மாயவனே ! உன்குறைநீங்கிற்று, நீ கருதியவரத்தைக்கேட்கக்கடவை, நீசெய்த பூசையாலுந்தியானயோகத்தாலும்,மூலமந்திரசெபத்தாலும், நாமகிழ்ச்சியெய்தினோம் எனத்திருவாய்மலர்ந்தருளக்கேசவன்பணிந்து சுவாமீ ! அடியேன் பூர்வத்தில் பன்றியாய்ச் சென்றுணராத நினது திருவடியை யிப்போது தரிசித்தேன். எனதுபிரமகத்தினையொழித்தேன், இனியெனக்கொருகுறையுமில்லை.முந்தித் திருவெவ்வளூரில்தீர்த்தேஸ்வரர் திருவடியைச் சிந்தித்து இருதயதாபநாசத் தடாகத்தில் படிந்து முன்பிரமகத்தியினையொழித்துக் கொண்டேன். அத்தலத்திலேயே நான் எந்நாளும் வசித்துக்கொண்டு காலையிலு மாலையினு மிங்விடம்வந்து தேவரீரைத்தரிசித்துவரல்வேண்டும். அன்றியு மத்தடாகத்தில் அமாவாசை புண்ணியகாலத்தில் எவர்நீராடினும் அவர்கள் பிணிகளனைத்துநீங்கப்பெற்று வினைத்தனவெல்லாமுற்று வாழவேண்டுமென்றனர். பெருங்கருணைவள்ளலாகியபரமசிவம் அவ்வரங்களைக்கொடுத்துப் பரசிவையுடன் சிவ

லிங்கத்திற்கரந்தருளினர். முகுந்தன்விடைபெற்றுத்திரு ம்பித் திருவெவ்வளூரில் அரவணைத்துயில்கொண்டுஇவ் வுலகமும் எவ்வுலகமும்போற்றத் தன்னைத்தரிசிக்கவரு வார்பலருக்கும் வேண்டியபிரசாதமளித்து வீரராகவர் எனக்கொண்டாட எழுந்தருளியிருந்தனர். வீரராகவப் பெருமாளின் வினையையொழித்த இத்தலத்திற்கு வினை நாசமெனவுமொரு பெயருண்டு.

திருமால்வினைதீர்த்தசருக்க முற்றிற்று.

---

## பால்வாசியறிந்த சருக்கம்.

சிவயோகச்செல்வர்களே ! மால்வினைநாசமென்னு மிப்பதிக்கு மேற்கில் காரணையென்னுமொரு நகருண்டு. அதில் ஆயர்குலதிலகனுக அரியகோன் என்னும்பெய ரை வாய்ந்த ஒரு இடையனிருந்தனன். திருவெவ்வளூர் வீரராகவரின்பிரமகத்தியினையொழித்த செகசென்மாதி காரணவஸ்துவாகிய சிவபெருமான்மகிமைகளைப்பலபே ரடிக்கடி இவ்வாயனிடத்துக்கூற அதனுலிவனுக்குப்பர மபதியாகிய பரமேஸ்வரனிடத்தி லதிகவன்பு வாய்ந்து நாடோறு மப்பெருமானைத் தரிசித்துவந்தனன். அந்த அரியகோனும் அவனதுகரம்பிற்சிறந்த மனைவியாகியவிம

லையென்பவளும் புத்திரப்பேறு விரும்பிச்சுவாமியைவேண்டிவந்தனர். சில நாளைக்குள் அப்பெருமா னருளால் அவர்கட்கு இலக்குமியினையொத்தவொரு பெண்குழந்தைபிறந்தது. அப்புத்திரிக்குக் குணவதியென்னும்பெயரைத் தாய்தந்தையரிட்டு நாளொருவண்ணந் தினமொருமேனியாக வளர்த்துவந்தனர். அப்பெண் அதிரூபசௌந்திரியவதியாகிக் கரியகூந்தலினையும், பவளவாயினையும், மதுரமான சொல்லினையும், தேமற்படர்ந்ததனங்களினையும், தளிர்போன்றகைகளினையும், விசாலமான அல்குலினையும்பெற்றனள். இத்தகையவனப்பினையடைந்த இக்குணவதியைமணம்பேசஆயர்குலத்தவருட் சிலர் வந்தனர். அங்ஙனம்வந்தவர்களை அரியகோனும் அவன் மனைவியும் பலவுபசாரத்துடன் வரவழைத்துத் திருமணம்பேசியனுப்பிவிட, அவர்கள் தங்களூர்போய்ச்சேருமுன்னர் இறந்தனர். மற்றுஞ்சிலர் இக்குணவதியைமணம்பேச வந்தாரும் இவ்வாறேயாயினர். அதனால் இவள் தெய்வப்பெண்ணெனப் பயந்தஞ்சி யாரும் இவளைப்பற்றிப்பேசாது இருந்துவிட்டனர். சிலநாளைக்குள் அரியகோனும் இவன்மனைவியும் கைலாயமடைந்தனர். குணவதியேங்கித் துன்பமுறச் சுற்றத்தார்தேற்ற ஒருவாறு தேறி மனத்துயர்நீங்கித் தாய்தந்தையர்களுக்குண்டாயி

ருந்த் சிவபக்திரனக்குமுண்டாக ஆதலால் தனதுசெல
வத்தினை யெல்லாம் தருமத்திற் செல்விடத் துணிந்து
சோமபுரத்தில் அனேகமான சோலைகளையுண்டாக்கியும்
தடாகங்களையெடுத்தும், தருமசாலைகளைக்கட்டியும், அ
ன்னதானங்கள்செய்தும், பலருக்கு விவாக முடித்தும்,
வாழ்ந்துவருகையில் குணவதிக்கு முப்பத்திரண்டு வய
தாயிற்று. அவள் கனவி லொருநாள் சிவபரஞ்சோதி
தோன்றி, குணவதியே ! உன்னைநாமடிமையாகக்கொண்
டனம். உனக்கு விவாக முடியாவண்ணம் நாமேதடுத்த
னம். இனிநமது திருத்தொண்டினையே செய்துகொ
ண்டிருக்கக்கடவாய் எனத் திருவாய் மலர்ந்தருளினர்.
விழித்து ஆயர்குல விளக்கான அம்மாது கனவினருமை
யினை யெண்ணியெண்ணி யானந்தங்கொண்டு முன்னி
னும அதிகபக்தியினைப்பெற்றுக் குடசவிருட்சத்தினடி
யிலெழுந்தருளியிருக்கும் சிவலிங்கப்பெருமானைச் சென்
றிறைஞ்சியேத்தி இத்தலத்தி லிப்பெருமானுக்குச் சந்தி
ரனெனவன் பாலபிஷேகஞ்செய்து பலவரங்களைப்பெற்
றானென்று பிறர்சொல்லக்கேட்டு என்செய்வேன் ! நான்
பிரதிதினமும் வேண்டுமானபால்அபிஷேகத்திற்குக்கொ
டுத்துவருவேன், அதைக்கொண்டு விதிப்படி அபிஷேக
ஞ்செய்வார் யாரையுங்காணேனே யெனத் தூக்கித்துக்

கொண்டிருந்தனள். அப்போது அவள்முன்னர், வேதத்தில்விளையாடும் விமலனாகியசிவபெருமான் ஒருமுனிவர் வடிவங்கொண்டுவர அவரைநோக்கிச்சுவாமீ! தேவரீர் எங்கெழுந்தருளியிருப்பது என்றனள். நாமிங்குதானிருப்பது என்ற முனிவரைக்குணவதியார் மிகுந்தவணக்கத்துடன் பணிந்து ஐய! நான் தினமுங் கொடுக்கும் பாலைக்கொண்டு, எனையடிமையாகக்கொண்ட இச்சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகஞ் செய்து வருவீரோ? என்றனள். அவ்வாறேசெய்து வருவோமென விசைந்து அன்றுமுதல்குணவதியார் கொடுக்கும் பாலினைத்தினந்தோறும்பெற்று அருட்பெருஞ்சோதியாகியசிவலிங்கத்திற்குத் திருமஞ்சனமாட்டிப் பீதாம்பரமுதலியசாத்தி, கந்தமலர்மாலையணிந்து, அமுதுமுதலிய படைத்துக், தூபதீபங்காட்டிப் பூசனைசெய்துவந்தனர். குணவதிசிறிதுஞ் சோம்பாது நியமமாக வேண்டியபால் கொடுத்து வீரப் பசுக்கூட்டங்கள் நாளுக்குநாள் விருத்தியாகிப் பிணிமுதலியவின்றி வாழச் செல்வம் விருத்தியாயது. இவ்வாறு நடந்துவருகையில் உலகத்தில் மழையின்றிப் பஞ்சம்வந்தெய்த, அதனால்மிகத்துன்பப்படும் அனாதுசுற்றத்தினர்க்குவேண்டிய உதவிசெய்துவரக் குணவதிக்கு நாளுக்குநாள் செல்வங்குறைந்துவிட்டது. அம்மனை

குறைந்தும் பாலனைத்துஞ் சுவாமிக்கே கொடுத்துவரும் தன்மையினையுணர்ந்து முனிவரொருநாள் குணவதியினிடம்வந்து அருள்கூர்ந்து, மாதே! நீ பால்முழுவதினையும் அபிடேகத்திற்கே கொடுத்துவருகின்றனை அதனால் இப்பஞ்சகாலத்தில் நினது சுற்றத்தினருக்கு மற்றையருக்கும் உபகரிக்க உனக்குவேறுவகையில்லை, ஆதலால் நாம்பிரதிதினமுனக்கு ஒருபொற்காசுகொடுக்கினறோம், அதனைப்பாலுக்கு விலையாகக்கொள்ளற்க. அக்காசினைக்கொண்டு நீ வேண்டிய தருமங்களைச் செய்துவரலாம். பானியமமுங்குன்றாது பசுக்கூட்டங்களையும்பத்திரமாகப் பாதுகாக்க வேது வுண்டாமென்றனர். புண்ணியவதியாகிய குணவதியதற்கிசைந்து வணங்கியேற்று அவ்வூரிலிருக்கும் நிதிக்கோனென்னும் செட்டியாரிடத்துத்தந்துமாற்றி வேண்டியதெல்லாம் பெற்றுத் தினந்தோறும் பந்துக்கள்முதலிய யாவருக்குமன்னமளித்துப் பஞ்சந்தீர்ன்றுதவண்ணஞ்செய்துவந்தனள். இங்ஙனம் நடந்தேறிவருகையில் குணவதியார் பசுக்களைக்கூலிக்கு மேய்க்கும் இடையர்கள்பாலைக்கரந்து விற்றுவிட்டு, அதற்குப்பதிலாகத் தண்ணீர்கலந்து அபிடேகத்திற்குக்கொடுத்துவந்தனர் அதுதெரிந்து முனிவர் ஒரு மாற்றுக்குறைவாகப்பொற்காசு கொடுத்துவர வாரம்பித்தனர். அங்

தககாசினையெடுத்துக்கொண்டுபோய் மாற்ற, நிதிக்கோன் என்னுஞ்செட்டியார் அயலூருக்குப்போயிருந்தமையின், அச்செட்டியாரின்புத்திரன்அக்காசினையேற்றுவழக்கப்பிரகாரம வேண்டியவைகளைக் கொடுத்துவந்தனன். அயலூருக்குச்சென்ற நிதிக்கோன் தன்காரியங்களையெல்லாமுடித்துகொண்டு தன்னூருக்குத் திரும்பி வீடுவந்துசேர்ந்து உணவுமுதலியவுண்டுதனது புத்திரனையழைத்து, குழந்தாய் ! குணவதியார் பொற்காசுவந்துகொண்டிருக்கிறதோவென்ன, தப்பாது வந்துகொண்டிருக்கிறதென்றனன், ஆனாலதனைக்கொண்டுவா பார்ப்போமென்றுவாங்கிபபார்த்து ஓ! ஓ! இக்காசு மாற்றுக் குறைந்திருக்கிறதே யிது வந்தவாறென்னவென்றனன், தந்தையே ! தாங்களூருக்குப் போகிறபோது குணவதியார் பொற்காசு தினம்வருமென்றும் அதிலொரு பழுதுமிராதெனறும் வேண்டியவெல்லாம் தாமதியாது கொடுப்பாயென்றுந் தாங்கள்சொல்லியபடியே செய்துவந்தேன். இதுவேயல்லாமல் எங்களிடத்தில் வேறுகுறையில்லை இது தான்செய்தியென்ற புத்திரனைநோக்கி அவ்வம்மணியாரிடத்து யாதொரு குறைவு நேரிடாதுஇவ்வாறு வந்தது ஆச்சரியமாக விருக்கிறது என்றுவணிகர் ஆலோசித்துக்கொண்டிருக்கையில், குணவதியார் நிதிக்கோனிடம்

பொற்காசுடனவந்து செட்டியாரே! எப்போது வந்தீர்! போயிருந்த காரியம்யாவும் அனுகூலமாக முடிந்ததோ! என்றுகேட்டுப் பதிலறிந்து பொற்காசினை அவ்வணிக னிடங்கொடுக்க அவனவாங்கி, அம்மணீ! முந்தியெலா ம நீ கொடுத்தவந்தகாசு இதல்ல இது வந்தவகையேது என்னுடைய மகனகையில் நீ கொடுத்தவெல்லாம் இப படியேயிருக்கிறது என்றனன். வணிகரே! முனிவர்என கூகுகொடுத்துவரும் பொற்காசன்றி வேறெனக்குக் கி டையாது ஆகையால் இன்னமுங் கவனித்துப்பாருமெ னற குணவதியாரை நோக்கி, என் சொல்லிற் சிறிதும் பிழையில்லையென்ற செட்டியார் சொல்லைநம்பி, அம்மை யார் முனிவரிடஞ்சென்று வணங்கிப பெருமானே! தே வரீர் எனக்குக் கொடுத்துவருங் காசிலேதோ மாற்றுக் குறைவதாக வணிகர் சொல்லுகின்றனரென்றனள். குண வதியே! கேள் நமது பெருமானுக்குத் தரும்பாலைத்திரு டிக்கொண்டு நீரைகலட்துகின்று இடையர்கொடுத்துவரு கின்றார் அந்தக்குற்றத்தினை நீ நாடாமையானும் கொ டுத்து வந்தகாசில் மாற்றுக்குன்றவாசியறிந்து ஈந்தோம எனற முனிவர் வார்த்தையினைக்கேட்ட குணவதியார் பதிலொன்றுங் கூறாது அஞ்சி முனிவர் கோமானே! ஏழையேனுடைய பாவினைத் தினங்கொண்டு சுகத்கார

ண பிரபுவாகிய சிவபெருமானுக்கு உபயோகபடுத்தி வந்தனே, பஞ்சமேலிட்டகாலத்தில் பொற்காசுஉதவினே, பாலினீர்கலந்ததனைக்கண்டு அந்தப்பழியெனையடையா வண்ணம் வாசியறிந்தளித்தனே, நின்னருளுக்களவுமுண்டோ என்றுகூறி விடைபெற்றுச்சென்று, இடையர்களை நோக்கிய பாலினீர்கலந்ததென்னை யென்றுகேட்க, அவர்கள்கலங்கிப் பிழைபொறுத் தாளவேண்டுமென்றுவணங்க, அவர்களிடத்திருந்தும் வணிகரடைந்த நஷ்டத்தினை வாங்கிக்கொடுத்துமறுபடியு முனிவரிடஞ்சென்று வணங்கிய குணவதியை முனிவர் நோக்கி, அன்பினுக்கினியமாதே! நினதுபக்தியினைக்கண்டு நாமுனிவராயிதுகாறும் வந்திருந்தோமென்று கூறிச் சிவலிங்க மிடமாக மறைந்தருளினர். அதுகண்டு அவ்வம்மையார் அந்தோ! கெட்டேன் முனிவரா நமது தெய்வமென வறிந்தேனில்லை, என்றுவிருப்பினொடும் பரவிப்போற்றித்தாழ்ந்தெழுந்து இப்பொய் வாழ்க்கைத் தவிர்த்தருள வேண்டுமென இறைஞ்சி அனலிற்படுமெழுகுபோல மனமுருகித் தொழுதுநிற்க, பொன்போல்விளங்கும் சடைமுடியுடைய சிவபெருமான் மயிலிளஞ்சாயல்போன்ற மலைமகளுடன் பளிங்குமலைபோல் விளங்கும் இடபத்தின்மீது காட்சிகொடுத்தருள, அக்கணமே குணவதியார், தேவர்

கள் மலர்மாரிபொழிய ஆகாயத்தில் தேவதுந்துபிமுழ ங்க மண்ணுலகமும் விண்ணுலகமும்போற்றப் பரலோ கஞ்சேர்ந்து சிவசாம்பிராச்சியமடைந்து வாழ்ந்தனள்.

புண்ணியமுனிவர்களே! சமஸ்தசரீர அந்தராத் மாவாக விளங்குஞ் சிவபெருமான் இத்தலத்தில்தன்னை த்தான்பூசைசெய்த செயலினையாராயின், அன்பேயுருவா யமைந்த வம்மையாராகிய குணவதியார்மீது வைத்தகிரு பையோ, திருப்பாசூர்த்தலத்து மகிமையோ, குடசவிரு ட்சத்தின்கீழெழுந்தருளியிருக்கும் சோதிமயமான திவ் வியலிங்கத்தின்மாட்சிமையோ, மற்றையர்கள் செய்துவ ந்த பூசைபோதாதென்றோ, நமதுபெருமான் றிருவுளப் பாங்கினை நாமெங்ஙன மறிவோம். இவ்வாசிநாதராகிய சிவலிங்கப்பெருமானுக்குப் பாலபிடேகம்புரிந்தால்அத னுலுண்டாகும் புண்ணியம் இவ்வளவினதென்று கணி ந்தோதுதற்குப் பிரமனாலுமியலாது. அங்ஙனஞ்செய்ப வர் இம்மையிலே மனைவிமக்கள் முதலாகிய சுற்றத்தார் செழிந்தோங்கப்பெரும்போகம் அனுபவித்து, மறுமை யிலே மாதேவன்வாழும் கைலைமாமலையில் கணங்களுக் குத்தலைமைபெற்று வாழ்வர்.

பால்வாசியறிந்தசருக்க முற்றிற்று.

## வேடபிடவங்கொண்ட சருக்கம்.

சிவபுண்ணியசீலர்களே ! இக்கலியுகத்திலே வாசிபுரியானது ஒருகாலத்திலே எங்குமூங்கில்களா னிறைந்துமிகநெருங்கிச் சிங்கம், புலி, யானை, கரடிமுதலியகொடிய மிருகங்கள் வாழுதற்கிடமாகவிருந்தது. அம்மூங்கில் வனத்தினொருபக்கத்தில் வேடுவர்கள் சிறிதுகாடழித்து நிலந்திருத்தித் தினைவிளைத்துக் குடியேறி வாழ்ந்துவந்தனர், இவ்வேடர்கட்குத்தலைவனாக வெள்ளாரை* என்னு மூரிற் குன்றனென்னும் பெயருடையவனாய்ப் பூர்வதவப்பயனால் முருகக் கடவுளிடத்து மிகுந்த பக்தியுடையவனாய், செல்வத்தில் மிக்கவனா யிருந்தனன். இவ்வாறு இவ்வேடர்க ளிருந்துகொண்டிருக்கையில், அனனவாகனனும் அவன்றந்தையும் அனேகமாயிரங் காலந்தேடியுங்காணாது அவர்கட்கு அடிமுடிகாட்டாது அமர்ந்த அண்ணலாகிய சிவபெருமான் ஒரு திருவிளையாட்டினைச்செய்யக்கருதி யொருவெள்ளிமலை வடிவெடுத்துவந்தாலென்ன வொரு இடபவடிவங்கொண்டுவேடருடைய தினைநிலங்களை யெல்லாமழித்தனர். வேடுவர் தங்கள்

* வெள்ளாரை இவ்வூர் திருப்பாசூருக்கு வடகிழக்கிலுள்ளது.

நிலைமழிவுற்றதற்குக் காரணமறியாது கடைசியாக இட பத்தின்குளம்பின் சுவடுகண்டு அவ்வழியே தொடர்ந்து தேடுகையில் அச்சுவடும் அவ்வனத்திலன்றி வேறிடங் காணாமையால், மயங்கி யதிசயித்து என்செய்வோம், இது காறுமித்தகைய் நஷ்டநமக்கு நேர்ந்ததில்லை, இந்தவிட பத்தினைக்கண்டுபிடிப்பது எவ்வாறு, அதனைக்கொன்றா லல்லதுநமக்குப்பிழைப்பில்லை. இம்மூங்கில்வனத்திலொ ளித்திருந்து அதனைவெல்ல நம்மரசனாலன்றி முடியாது என்றெண்ணி வேடரெல்லாங் கூட்டங்கூடிக் கள், கிழ ங்கு, கனி, தினைச்சோறுமுதலிய சேகரித்துக்கொண்டு, வெள்ளாரைக்குச்சென்று, குன்றனைக்கண்டு, தாங்கள் கொண்டுவந்தவைகளைக் காணிக்கையாகவைத்துப பணி ந்து, நடந்தவரலாற்றினையெடுத்துக்கூறி, இன்றுவராவி டில்நாளைக்குத்தினைமுழுவது நாசமாகிவிடு மென்றிறை ஞ்ச, அவர்கள் வேண்டுகோளுக்கிசைந்து, அக்குன்றன் வேட்டைமேற்செல்லத்தனது வேடுவரெல்லோருக்குமறி வித்துக்காலிற்செருப்பிட்டுக் கையில்வில்லேந்தி, தோலு டுத்து, அம்புத்தூணியைத் தோளிற்றொங்கவிட்டு, சுரி கையைத்தாங்கிவெள்ளிவர, இருபக்கங்களிலும், வேடர்கள் மழு, வாள், வலை, வசர், பாசமுதலியசுமந்து, கொம்பு, துடி,

வேய்ங்குழல், முரசு, பம்பைமுதலியமுழங்கப் பெருஞ்சமுத்திரம்போன்று தொடரத் தினைபபுனத்திற்குச் சமீபத்தில்வந்தனர். அப்போது இடபமானதுசிங்கம்போற கர்ச்சித்து இருகோட்டுப் பருவதம்போலநின்று, பூமிபளமாகும்படிக் குளம்பினாற்கீறி, நான்குபக்கங்களிலு மோடியாடி* உன்னதமான பெரியவலுத்தமரங்கள் பலவற்றினை முறித்துத்தள்ளித் தினைக்கொல்லை முழுவதினையுஞ்சிதைத்தது. இதனைக்கண்ட வேடுவர்கள் கோபங்கொண்டு நெருங்கப்பயந்துதிரும்பித் தங்கள்தலைவனிடங்கூற, அக்குன்றன் அக்காட்டினை நான்கு பக்கங்களிலும காவல்செய்து, வார்வளைத்து, பாசம்வீசி, துடியினை சத்தம விளைவித்து, உட்புகுந்து, திக்கனைத்துஞ் சேனையால்வளைந்து, மெள்ள மெள்ள நெருங்கிச்செல்ல, இடபமானது முழங்கி, ஆகாயமண்டலந் தாவியுலவ, அதனைக்கண்ட வேடுவர்கள்சிங்கத்தினைச் சூழ்ந்தயானைகளையொத்தவர்களாகி, இவ்விடபமுஞ் சீக்கிர நமதுகையிற்கிட்டாதெனவெண்ணி யேககாலத்தில், தங்களிடத்திலுள்ள அம்புகளையெல்லாம் அவ்விடபத்தின் மீதுமழையைப்போலப் பொழிந்தனர். அவ்வம்புகளியாவும் அவ்

* இடபமாடியவிடத்திற்கு விடையூரென்று இன்னும் வழங்குகின்றது.

விடபத்தின்மேல் புஷ்பம்போல விழுந்தன. இடபங்கர்ச்சித்து வேடர்களுடன் இந்தவுலகமெல்லாமுய்யும்பொருட்டு மறைந்துவிட்டது. குன்றன் உளம்வெருவி, ஓடுவாரைநிறுத்தி வாடி நொந்து வேடருடனகூடித் தன்மனங்கொதித்துக் கோபித்துக் கூறுவான், ஐயோ ! இனிநாம் செய்வது யாது ? நாம் தோற்றனம், நம்மை யினி மதிப்பவர் யார் ? இறக்கினும், பிறக்கினும் இவ்விடமே நங்கதியெனத் திர்மானித்து அவ்விடபஞ்சென்ற இடந்தானெது காண்போமென்று எங்கணுமோடி மூங்கிற்காடு முழுவதுநுழைந்து அலுத்துக் காணாது திரும்பி, மனமழிந்து, வாடிநிற்கையில், அவன்பூசிக்கும் வேலுடைச்சாமி தேவராளனு யெதிர்வந்து அக்குன்றனைத்தேற்றி, இதோதெரிகிற மூங்கில்புதரினைச் சோதித்தால் அவ்விடபம் அகப்படுமென்று சொல்ல, அக்குன்றன் முதலிய வேடர்கள் அங்ஙனமே தேடவெண்ணிய மாத்திரத்தில் அவ்வேலன் மறைந்தனர்; வந்தவர் தங்கள் குலதெய்வமாகியமுருகவேளென்றெண்ணி யானந்தங்கொண்டு மூங்கில்களை யெல்லா மழித்துக்கொண்டு வருகையில், ஒரு பெருமூங்கில் வேரோடு மேருமலை சாய்ந்தாலென்னக்கீழேவிழுந்தது. அதனடியிலிருந்து இரத்தம ஆறுபோல்பெருகியது. வேடுவர்பலரும்விழுந்து பறைப்புறக்

கிடந்தனர். அப்போது சர்வலோகானுக்கிரக வற்புதவு ருக்கொண்டு ஒப்பற்ற தனது சடைமுடியிற் சுவடுதோ ன்ற வொரு சிவலிங்கரூபமாய் முளைத்தனர். அக்கல்யா ணசுந்தரமங்கள வடிவினைக்கண்ட அமரர்கள் ஆகாயத் தில் மலர்மழைசிந்தினர். தேவர், வித்தியாதரர், கின்ன ரர், கிம்புருடர், கருடர், காந்தருவர், சிவகணங்கள், யட் சர் முதலோர் சங்கர ஜயஜய, சங்கர ஜயஜய வெனவார வாரித்தனர். அப்போது கிருபாநிதியாகிய சிவபெரு மான் அழகிய நோக்கம் அவ்வேடர்கண்மீது படுதலும், அவர்கள் தேகத்தி னிறம்வேறாகி வேதகத்தால்இரும்பு பொன்னானதுபோல வினையெலா நீங்கப்பெற்று, வாய் மை, ஞானம், அன்பு, மகிழ்ச்சி, ஆசாரம், சீலம், தூய் மை, ஒழுக்கம், மேன்மை, துறவு, அடக்கமுதலிய அரிய செய்கைகளையெல்லாமடைந்து விளங்கினர். அம்மூங்கி லின்கீழ் முளைத்தபெருமானுக்கு வேயின்றமுத்தளெனு ம்ருமைத் திருநாமம் விளங்கியது. பின்னர், அச்சேடச் செல்வர்களாகிய வேடுவர் அப்பெருமானது திருமேனி யில் வெயில் முதலிய தாக்காவண்ண மூங்கிலினாலொரு பந்தர் வேய்ந்தனர். சுவாமியின் முடியினின்றும்பெருகி யோடி வருகிற உதிரத்தினைத் துடைக்கத் துடைக்க மேலுமேலும் பெருகிவருதலைக்கண்டு பயந்து, கருணைக்

கடலே! நீயே யிவ்வுதிரம்பெருக்கினை நிறுத்தவேண்டு மென வேண்டிக்கொள்ள உடனே நின்றுவிட்டது. பின்னர் அச்சேடச் செல்வர்கள் தேவதேவனை யிறைஞ்சிச் செந்நீராலுண்டாகிய அனுசிதத்தினையகற்றிச் சோமதீர்த்தத்தில் விதியின் மூழ்கிபபரமபதியைப் பூசைசெய்ய வெண்ணிச் சிவாகமங்களிற் குறித்தபடி திருமஞ்சன முதலிய திரவியங்தேடிப் பரிவினுடன் பூசைசெய்தனர். திருவேணிநாதனாகிய திவ்விய சிவலிங்கவடிவினைப் பூசித்ததன்மையால் இச்சேடச்செல்வர் யாவருக்கு மேலவராயினர். இச்சுயம்புலிங்க மெழுந்தருளிய தலத்தினெல்லை ஐம்பத்தைந்து காதமாகும். இவ்வெல்லைக்குள் ஐந்து திருப்பதிகளைக்கொண்டுபெருமான்விளங்கினர். இத்தலங்களிலேயே மங்கலமுனி சோமன்முதலிய வனேகர் பூசைசெய்து முத்திபெற்றனர். இச்சேடச்செல்வர் எங்கள் மூவாமுதல்வனாகிய சிவபெருமானுக்கு ஆலயமும் மாடவீதிகளுமெப்போது உண்டாமோவென்று எண்ணியொருநாள் நித்திரைசெய்கையில் அருட்பெருங்கடவுள் அவர்கள் கனவிற்றோன்றிச் செல்வர்களே! வெகு சீக்கிரத்திலுங்கள் விருப்பத்தின்படி. எனது அன்பனாகிய சோழனும் கரிகாலன் இங்குவந்து முடிப்பானென்று

திருவாய்மலர்ந்தருளினர். நித்திரை விழித்துக் கனவினுண்மை யொருவரிலொருவர்கூறி மகிழ்ந்திருந்தனர்.

வேயிடங்கொண்டசருக்க முற்றிற்று.

---

## கரிகாலன்பதிகாணுஞ் சருக்கம்.

சிவானந்தமுடையவீரே! வேடுவர் தலைவனாகிய குன்றன் இடபத்தையெண்ணி வேட்டையின் மீதுற்ற போதே, அவ்விடபத்திலுலழிந்த தினையனைத்து முன்விளைவினைக்காட்டிலும் இரண்டுமடங்கு அதிகமாகவிளைந்திருப்பதனைக்கண்ட அத்தினையினைவிளைத்த வேடர்கள் இஃதென்னை! ஆச்சரியமாக விருக்கிறது. இத்தகைய விளைவினைநாமெப்போதுங் கண்டதில்லையேயென, அச்சங்கொண்டு நடுநடுங்கிப் பொறிகலங்கி எழுநாள்வரையில் உணவின்றிப் பதுமைகளைப்போல விளங்கினர். இவர்களைத் தேடிக்கொண்டு வந்த சிலவேடுவர்கள் இவர்களையிட்டுக்கொண்டுபோய் வேடுவத்தலைவனும், மற்றையருமெங்கேயென்று கேட்க, அவர்கள் பதில்கூறிய மாத்திரத்துக் கேட்ட அவர்களும் அவசமுற்றனர். மற்றைவேடர்கள் இவர்களைக்கண்டு இவர்கள் சுவபத்தில் சுய்த்து வசமாகாரென்று எண்ணி. பிறிக்கையில் ஒரு

மறவன அவர்களை நோக்கிச்சொல்லுவானாயினன் எயி
னர்களே! காஞ்சிமாநகரத்தில் கரிகாலச் சோழனென்னு
மொரு அரசனுளன். அவன்மனுநீதியும், தருமசிந்தை
யும் எக்குலத்தினரையுங் காக்குங்குணமும், சந்திரசடா
தாரியாகிய சிவபெருமானுடைய திருவடிகளில் மாறாத
அன்புமுடையவன். அவன் சிவபூசை செய்தன்றி யொ
ருபொழுதும் புசிப்பதில்லை, சுயம்புலிங்கமெங்குளதோ
அவ்வத்தலந்தோறுஞ் சென்று தரிசிக்கு நியமமுள்ளா
ன. சிவலிங்கத்தையும், சிவகணங்களையும், விபூதி, உருத்
திராட்ச பஞ்சாட்சர செபமுள்ள அடியார்களைக்காணு
ம்போது சிவபெருமானைக்கண்டதாக நினைந்து தொழு
வான். சிவனடியார்கள் விரும்பிய எப்பொருள்களையும்
இல்லையென்னது கொடுப்பான். தன்னரசின் கீழ்வாழு
ங் குடிகள் எவ்விதத்திலும் வருந்தாவண்ணம் காத்து
வருவானென்றனன. இதைக்கேட்ட வேடுவர் அகமகிழ்
ந்து ஆலசனுண்ட நமக்கு இவ்வுண்மையினை யுணர்த்த
வல்லவன், அச்சோழனை யென்னத்தீர்மானித்து, நடந்
தவற்றையெல்லா மவனுக்கு மறிவிப்பேமெனநாடி, புலி
த்தோல், மயிற்பீலி, மான், மரை, கரடி, புலி, வேட்
டைநாய், யானைக்கோடு, முத்தம், தேன் முதலிய காணி
க்கையாகக்கொண்டு, காஞ்சிநகர்சென்று, சோழனதுமா

ளிகைவாயிலிற் சேர்ந்து தங்கள்வரவை அரசகோமானு க்குத்தெரிவிக்கும்படி வாயில்காப்பாளருக்குக்கூற, அவ ர்களரசனுக்குத்தெரிவித்து, அவன்கட்டளையின்படியுள் ளேவிடுப்ப வேடுவர்கள்சென்று, வெண்குடை நிழற்ற, சோதிமயமான மகுடமின்ன, இருபக்கங்களிலும் கவரி வீச, பலவரசர் சூழ்ந்து போற்ற, இரத்தினமயமான சிங் காசனத்தின்மீது இந்திரனுக்குச் சமானமாக வீற்றிருக் கும்சோழமகாராஜனைக்கண்டு, இருகரங்களையுங்கூப்பிப் பூமியில் விழுந்து இறைஞ்சித்தாங்கள் கொண்டுவந்த திறைகளைமுன்வைத்துப்போற்ற அவர்கள் முகத்தினை அரசனோக்கி வேடுவர்களே! நீங்களிங்குவந்தகாரணமெ ன்னவெனவினவினன். பூமண்டலாதிபதியே! பாவங்க ளை யொழித்துப் புண்ணியத்தினைவிளைவிக்கும், பாலா ற்றின்வடகரையிலே, ஈறுமையாதவேய்க்காட்டிலே,நாங் களொருபக்கத்திலே விளைத்துவந்த தினைப்புலத்தினை அழித்த ஒருஇடபத்தினைப்பிடிக்கும்பொருட்டு எங்கள் தலைவன் குன்றனென்பான் நெருங்குகையில் அவ்விடப மறைந்துவிட்டது. அதுகாணுது தியங்குகையில் முரு கவேள் தேவராளனுய் எழுந்தருளி அவ்விடபமறைந்த மூங்கில் புதரினைக்காட்ட அதனை வெட்டுகையில், ஒரு மூங்கிலின் கீழ் இரத்தவெள்ளம் பெருகியது. அது

எனன்வெனநாட, வேத வேதாந்தங்களு் இன்னுங்கண்டு தெளியாத சிலம்பணிந்தசேவடியினையுடைய சிவபெரு மான் சிவலிங்கரூபமாக முளைத்திருக்கககண்டனம்.இட பத்தாலழிந்த தினைப்புலம் இருட்டங்கு அதிகமாகந்தா னேவிளைந்துவிட்டது. இதனைக்கண்ணுற்ற வேடர்சிலா அவசமாகி மருள்கொண்டு விளங்குகின்றார். இந்தஉண் மைகளைச் சந்நிதானத்தில் விண்ணபபிக்கவந்தனம். என றுகூறி வேடர்பணிந்தனர். சோழன்கேட்டமாத்திரத்தி ல் உடல்பூரித்து, ஆனந்தங்கொண்டு, அதிசயமெய்தி, அப்பதியைத்தரிசிக்க உவகைகொண்டு எழுந்து தனது மாளிகையைநீங்கி, இரதகஜதுரகபதாதிகள் தன்னைச்சூ ழ்ந்து வர ஒரு அழகிய இரதமேறி வேகமாகச்சென்று மூங்கில்வனஞ் சமீபித்தமாத்திரத்தில் முன்னம் அவச மாகி மருள்கொண்டிருந்த வேடுவரெதிர்வந்து விபூதிய ளித்துஆசீர்வாதங்கூற, விபூதியேற்றுவணங்கி, அவர்க ளுண்மைதெரிந்துகொண்டு, அப்பாற்சென்று மூங்கில் டியில் முளைத்த முழுமுதற்கடவுளாம் முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம்பொருளாகிய சிவபெருமா னைத்தரிசித்துப் பூமியின்மேல் தண்டாகாரமாய் விழுந் து எழுந்துநிற்கையில், மறுபடியுஞ் சிவலிங்கப்பெருமா ன்திருமுடியினின்றும் உதிரம்பெருகியது. அரசன் பய

ந்து மூர்ச்சித்துக் கீழ்விழுந்து மெள்ளவெழுந்தவுடன் இரத்தப்பெருக்கு நின்றுவிட்டது. அரசன் வாழ்ந்தேன்! வாழ்ந்தேன்! என்று மகிழ்ந்து கூத்தாடிப் பாடிப்பரவிப்போற்றித் துதித்து வாழ்த்திச் சமீபத்திலிருந்த சேடர்கள் முன்னடந்த விருத்தாந்தங்களையெல்லாங் கூறக்கேட்டு, ஆ! ஆ! நாயினுங்கடையேனை இந்தச்சிறியனையு மதித்து உங்கள் கனவில் வந்து கலையெலாங்கடந்த கண்ணுதன்மூர்த்தி கழறினரோ? என்புண்ணியமே புண்ணியம், என்சென்மமே சென்மம், எனது கிருபாநிதி கட்டளையிட்டவாறே ஆலயமாதிசெய்து முடிப்பேன் என்றுகூறி, அரசன் அப்பதிக்குப்பாகூரென்று திருப்பெயரிட்டழைத்து அப்பெருமான் கருணையை யெண்ணி யெண்ணி ஆனந்த பூரிதனாய் வாழ்ந்து வந்தனன்.

கரிகாலன் பதிகாணுஞ் சருக்கமுற்றிற்று.

---

## காளியைச்சிறையில்வைத்த சருக்கம்.

சிவஞானிகளே! கண்ணுதலடியைக்கனவிலு மறவாக்கரிகாலச்சோழன் ஒருநாள் தன் சமீபத்திலிருந்த ஒருசேனைத்தலைவனை நோக்கி எனக்குத்தெரியாத அரசர்கள் பாரிலுமுள்ளரோவென்றனன். அவன், அரசே!

மோகூர் என்னும் பட்டினத்தில் ஒரு குறும்பனுளன் என்றனன்; கேட்ட சோழன் ஆ! ஆ! நாமிந்தவுலகினை யாளும்விதமிக நேர்த்தி நேர்த்தியென்றுகூறிக் கடுங் கோபங்கொண்டு, சிரித்துத் தலையசைத்து, இதுகாறு மக்கு இச்செய்தியைத் தெரிவிக்காததென்னையென்று மந்திரிகளைக்கேட்டனன். அவர்கள் பயந்து அரசனடியிற்பணிந்து எங்களையாண்டருளும் மணிமுடி மன்னனே! மன்னிக்கவேண்டும், தயைகூர்ந்து எங்கள்வார்த்தையைக்கேட்டுச் செவிகொடுத்தருளுக. மோகூரையாளுங்குறும்பன்மூவுலகத்தராலு மழிவானல்லன். அவன் விநாயகர், சுப்பிரமணியர், வயிரவர், காளி இவர்களைவர்களையும்வெகுகாலம்பூசிக்க அவர்கள் பிரத்தியட்சமாயினர். அவர்களிடம்பலவரங்களைப்பெற்றுத்தனது கோட்டைக்குக்காவலாக நான்குதிக்கினும்நான்கு கோயில்கள் கட்டி அவர்களையெழுந்தருளச்செய்து தனக்கு ஒருவருநேரின்றியாண்டுவருகின்றான். மோகூரை யாண்டுவருகிறபடியால்அவனுக்கு மோகனென்னும்பெயருண்டு. இத்தகைய அவன் தவவலிமையினைக் கண்டு சந்நிதானத்தில் விண்ணப்பியாது இருந்தன மென்றனர். மந்திரிகளே! அக்கணக்குதேவர்களும் அக்குறும்பனுக்குத் தஞ்சமெ

ன்றீர்கள், இங்கென்னை யாண்டுகொண்ட பாசூர்நாதன் எளியனோ ! உங்களுக்குள்ளவறிவு இவ்வளவுதானோ ?

"என்னையாண்டருளுங் கோவையெள்ளினு ளெண்ணெய்போல, மன்னியேயெங்குநின்றுமலர்ந்தபேரொளியானானை, யுன்னுவாருள்ளநீங்கா தொளிர்பெரும் பருதியானை, யன்னையிலினியனாகியடைவதற்கருளுவானை."

"மாலயன் றேடுங்காலை வளரழற்பிழம் பானானை, காலமூன்றறிந்துநின்றகடவுளை நடுவுமீறு, மூலமுமில்லாதானைமூன்று மொன்றில்லாதானை, வேலைசூழ் ஞாலம் போற்றவேயிடங்கொண்டான்றன்னை."

"அருவுமாயுருவுமாய்மற்றகண்டிதமாய்நின்றானைப் பெருமிதக்கணங்களங்கிபெற்றொளிரவிசோமன்கள் மருவரிமுதலாந்தேவர்வருந்திடவடுச்செய்தானை யுருகுளத்தவர்கள்வேண்டிற்றுதவிபெருமான்றன்னை"

"கூற்றினைமாளக்கண்டற்காய்க் குழைத்தசேவடியினானை, மேற்றிகழ் தேவர்வேண்ட வேலைநஞ்சயின்றான்றன்னை, போற்றிடுமெவர்க்கும்பொய்யாப் பொருளதாம் புராணன்றன்னை, நாற்றிசைபரவப்போற்றுநானவற் கெளியன்போலும்."

என்று இருகரங்களையுமொன்றுடனொன்றுதாக்கி முடிதுளக்கி, கண்கள்சிவந்து [illegible], அமைச்சர்கள்,

அரசனே! நாங்கள் யுத்தத்தினுக்குச் செல்கின்றோம் தேவரீர் வேண்டாமென்றுதடுக்க, அவர்களைப்பார்த்து அமைச்சர்களே! பயமுடையவர்கள் போருக்குப்போகுந்தகுதியுடையரோ? வஞ்சமான மந்திரிகட்குப்பேசவும்வாயுண்டோ? உங்கள்வார்த்தையினைக்கட்டிவையுங்களென்றவரசனைப்பணிந்து, எங்கள்பிழையினைமன்னித் தருள வேண்டுமென்று மந்திரிகள் கூறியமாத்திரத்து, நாமுமுடன் செல்வோம் படையினைச் சித்தஞ்செய்யுங்களென்று அரசன் கட்டளையிட்டனன். யுத்தகோலங்கொள்ளும்படி எங்குமுரசறைந்தனர். இதைக்கேட்டுப் பலநாளாகப் போரின்றித் தினவு கொண்டிருந்த புயங்களையுடைய வீரர்களாகிய காலாட்களும், யானை, குதிரை, தேர் முதலிய நடத்துபவரு மொருங்குசேர்ந்து பிரயாணமாகினர். வேல், வில், வாள், தண்டு, பாசம், சூலம், பரசு, கைவேல், குலிசம், மங்கி, சுரிகை, சொட்டை, முசலம், வேல் முதலிய பலவாயுதங்களை யேந்திய வீரர்கள் நெருங்கினர். பிரளயகாலத்திற் கடல் கொப்புளித்துப் பிரவாகித்தாலென்ன, சேனைகளாரவாரித்து மிடைந்தன. சோமனுமொரு இரதமேறிப் பிரயாணப்பட்டனன். இவ்வாடம்பரத்துடன் போருக்கு வருவதைக கேள்வியுற்ற சோமகன்றனது கோட்டைவாயில்களைக் காத்துக்

கொண்டிருக்கும் தேவர்களை வணங்க, அவர்கள் மோகனே! அஞ்சவேண்டாம், சண்டைக்குச்செல்க, உன்றனக்கு அபஜெயம் வாராதவண்ணம் நாங்கள்வந்து உதவி செய்வோம் என்றனர். கேட்டமோகன் ஆனந்தங்கொண்டுயுத்தசன்னதனாய்த் தனது அபாரமானசேனையுடனவந்து எதிர்த்தனன். இருவரசர் படைகளும் ஒருவரோடொருவர் யுத்தஞ்செய்ய ஒருவர்மேல் ஒருவர் பிரயோகஞ்செய்யு மாயுதங்களால் பலர் மாண்டனர். எங்கு மிரத்தவெள்ளம்பரவியது. இறந்தவர்கள் போகமீதி படையுடன் மோகன் மிகுந்த ஆவேசத்துடனெதிர்க்கச் சோழனுடைய சேனைக்காவலரவர்கள் படைகளைத்தாக்கி முறித்து மோகனே! நீ திரும்பி நின்பட்டினம்போய் இளைப்பாறுமென்று விரட்டினர். மோகன் பின்வாங்கிச் சென்று தன்னுடைய தேவர்கள் மலர்த்தாளைத்திவணங்க அவர்கள் நால்வரும் பிரயாணமாயினர். காளிமற்றைய மூவர்களைநோக்கித் தென்றிசைவாயில் என்னுடைய காப்பிலிருக்கிறது. அங்கு நடக்குஞ் சண்டைக்கு நீங்கள் வரவேண்டாம் நானேபோய்வெற்றிகொண்டு வருவேனென்று வீராவேசத்துடன் கிளம்பிச் சோழனெடும்படையினைப் பார்த்து இந்த யுத்தத்தில் மாயவேண்டியவர்கள் என்முன்வாருங்கள், மற்றையர் இக்களஞ்

விட்டுப்போய் விடுங்களென்றுகூறித் தனது சூலாயுதத்தினைச் சுழற்றி ஆகாயத்தில்வீசி, விற்படையினையெடுத்து வெங்கணைகளைத் தூண்டி மண்ணுலகமும் விண்ணுலகமு நடுநடுங்கச் சோழன் சேனையைக்கிட்டினள், அடுபடைகெட்டதெனவே முட்டினள், இயமனுங் குலைகுலையவாள்கொண்டு யானைவீரர்களையும் குதிரைவீரர்களையும் வெட்டினள். அப்போது சோழனும் வாட்படைகளும் அமைச்சரும் யானை, குதிரை, தேர்வீரர்களும் காளியைசசூழ்ந்துகொண்டனர், இங்கிது நன்றுநன்றென உக்கிரத்துடன் காளியானவள் பார்த்துச் சிலபடைகளைப் பிரயோகிக்க, மன்னன் படைகள் மாயமாய்ப்போயின. பிணக்குவியல்கள் மலைகள் போற்குவிந்தன. இரத்தமெங்குஞ் சொரிந்தன, நீண்முடியெங்கும்விரிந்தன, வெம்படையெங்குமுறிந்தன, பருந்துகளெங்குந்திரிந்தன. நால்வகைச்சேனைகளும் வீடின, கவந்தங்களோடின, கூளிகள் நிணத்தையருந்தியாடின. காளியின் பாதமேத்திப்பாடின. இவ்வணந்தன்படைகள் சிதைவுறச்சோழனதன் படையினைநிறுத்திக் காளிமுன் சீக்கிரஞ்சென்று நினது வலிமையின்றேயொழிப்பேனென்னக் கேட்டுக் காளி இடியெனச்சிரித்து எனது அஞ்சாமையினையும் வீரப்பாட்டினையும் புவனமெங்கு மதித்து இருக்கின்றது.

என்னைத் தொழத்தகுந்த மனிதனாகிய நீ வென்றிடுவே னென்று வீரம்பேசி யெதிர்ந்தனை, இன்று உன்னை இவ் வம்பினால் யாருங்காணக் கொன்றிடுவேனென்று கூறிச் சீறினள். அவ்வார்த்தையினைக்கேட்ட சோழன் வில்திர ம்பேசிவிட்டதனாலேயே வென்றதாகுமோ? நீ சத்திதா ன் நானொருமனிதன்றான் தப்பில்லை என்னுடனமர்செய் யவருவாயென்றனன். காளி பல அம்புகளையேவினள், சோழன் அவைகளையெல்லாந் தடுத்தனன். காளி மேலு ஞ் சிலகணைகளையேவ, சோழன் ஒருவாளியாலவைகளை யுமாற்றி, ஆழியொன்றுவிட்டுக் காளியின் கரத்திலுள் ளவில்லினைத் துணித்தனன். காளி வெகுண்டு தண்டு ஒன்றினைச் சோழன்மேல்விட அவனதை விலக்கிக்கொ ண்டு பலகணைகளைப் பிரயோகிக்கக காளி அவை தன மேலுறாதபடி மாற்றிக்கொண்டனள், சோழன் சரமாரி பொழிந்தனன். காளி விட்டவொருவேலானது அவை களையெல்லாமறுத்து அக்கினியைக் கக்கிக்கொண்டு செ ன்று சோழன்மார்பிற்பாய அவன் சிவாய என்றவுடன் அது இருதுண்டமாயிற்று. சோழன் ஒருவேலினைக் கா ளிமேல்விட அது அவள்கவசத்தினைத் துணித்தது. அது கண்டு அக்காளி மிகவுங் கொடியதாகியமுத்தலைச்சூலா யுதத்தினை யெடுத்து அரசன் முடியினைக்கொண்டுவா

வென்ப் பிரயோகித்தனள். தாருகாசுரனைச் சம்மாரஞ் செய்யச்சங்கரனால் அவள்பெற்ற அப்படையானது அக் கினிப்பிழம்பாய், எதிர்த்ததெய்வப்படைகளையெல்லாம் விழுங்கிக்கொண்டு வரக்கண்ட சோழன், வாடியோடி வேயிடங்கொண்ட விமலனார் திருவடியில்விழுந்து அப் பனே! ஐயனே! அண்ணலே! நினக்கெதிரானவர்களொ ருகு மின்மையால், நின்றிருவடிக் கன்புபூண்ட எனக்கெ திரானவர்களுமிரார் என்றெண்ணியே காளியுடன் போ ர்செய்ய, என்படைபின்வாங்கின, யானுனதடைக்கலம், உன்னையல்லாது எனக்கு நற்றுணைவேறுண்டோ? இவ வுண்மையினையறிந்து அன்னையைக்காட்டிலுமினிய நீ யிப்போது அருள்செயாவிடில் என்னுயிரினை யிவ்விட த்திலேயே விடுவனென்றனன். அப்பொழுது, அன்பர் கருதியவற்றை யளிக்கு மண்ணலாகிய சிவபெருமான் இரங்கிச் சோழனே! நினது பெரும்படையுடன் செல் லுக நாமும் உன்னுடன் ஒரு அத்திரமாகிவருவோம். ஆகாயவழியாக நாம் வருதலை எமது இடபக்கொடிமுழ ங்கிக் காட்டும் என்று அசரீரிபிறந்தது. இதைக்கேட்ட மாத்திரத்தில் வேந்தன் மலைகளையொத்த தனது புயங் களைக்கொட்டி உய்ந்தேன்! என வகரவாரித்து முழங்கி

லடியில் முளைத்த மூவாமுதல்வனே! அடியேனுக்குப் படை பலகிருபைசெய்தருள வேண்டுமென்றனன். அக்கணம் ஆண்டவனருளினால் பலபடைகள் தனனை நெருஙகின. அரசன்கண்டு அரனடியில் வீழ்ந்து பணிந்து எழுந்து வெளிவந்து தன்சேனைகளையுஞ் சேர்த்துக்கொண்டு அண்டஞ்செவிடுறச் சேனை யெங்கணுமாரவாரிக்க அரசன், நாராயணவிருதய ஜெபமந்திரமாகிய ஐந்தெழுத்தினையுச்சரித்துக்கொண்டே இரதமேறிக காலாக்கினிருத்திரனென வருங்கால், ஆகாயத்தில்விடைகொடியினொலியினைக்கேட்டுளமகிழ்ந்து சிவனே! சிவனே! என வார்த்தனன். அமைச்சர்கள் அர அர அரவென அழைத்தனர். வானெலாமபூமழைநிறைதரத் திக்கெலாந் துந்துமி நாதங்கள்சூழ, வேதமோடரியயன் துதிபப மாதவர், பூதவேதாளங்கள்போற்ற, சங்கநாதங்கள பல்லியம், வீணைகடமுழங்க,முனிகணந்தோத்திரமெடுப்ப ஆதிநாயகன்வந்தனன், அமலநாயகன்வந்தனன், வேதநாயகன்வந்தனன், விமலநாயகன்வந்தனன், நீதிநாயகனவந்தனன், நிமலநாயகன் வந்தனன் என்று பொற்சின்னம்பொலிந்தன, இம்மங்கள ஒலியினைக்கேட்ட காளி உதட்டினை யதுக்கிச் சோழனுக்கு முக்கண்மூர்த்தியுதவியாய்வந்தனரென முனிந்து, உக்கிரத்துடன், அண்ட

முகமெதிரக் கொக்கரித்துப் படைகளெல்லாம் வருக வெனக்கூறித்து, சூலம், வாள், கேடயம், அம்பு, சாபம், பாச முதலியவற்றை யெத்திக்கினும் வீசி, ஊழிகாலத்துத் தீயோவெனக்கண்களிலும், செவிகளிலும், நாசியிலும், வாயிலும், கனலைக்கக்கி, அண்டமியாவு நடுங்க குடசசோழனை முன்னேவந்து சொல்லுவாளாயினள் மனிதனே ! நீ பறையபடி யோடிப்போவையோ, அல்லது போர் செய்குவையோவென, கேட்டவேந்தன், ஓ எகாளீ ! சர்வலோகைக சரண்யனாகிய சங்கரனென்பானுளன் நின்னையொருபொருளாய மதிப்பனோ ? என்றனன். உடனே போர்விளைந்தது. சிலகணங்கள் மலைகளைப்பிடுங்கிப் பறையடிக்கும், சிலகணங்கள் கடலையுண்டேப்பமிடும், சிலகணங்கள் பாதாளத்துச்சேடனைப்பிடுங்கும். இத்தகைய பூதங்கள் படையெங்கே யெங்கேயெனவுறுதிரிட்டன. மேருவையொப்பாளாகியகாளி மற்றையமலைகளையொப்பாராகிய சேனையுடன் பூமியினடந்துவந்து அரசனே ! என்னுடன் யுத்தஞ்செய்யவருபவன்நீயோ? சிவனோ? என்றனள். நானேவருவனெனச் சோழனை கூறிப்பாசூர்நாதன்பசியச்சரலைப்பரவிக்காளியின் சேனைமேற்பாய்ந்து கடும்போர் செய்தனன். காளியு மிகுந்த சினங்கொண்டு அதிக ஆவேசத்துடன் அம்புமாரிபொ

ழிந்தனள். அப்போது அரசன் ஆற்றலுக்கு அஞ்சிக்கா ளியின்சேனையெல்லாங் கால்வாரிக்கொண்டன. சோழன் கருணைத்தடங்கடலாகிய பாசூர்நாதன் அளித்த தேரி லேறி அப்பெருமான்கொடுத்த ஆயுதத்துடன் காளிக்கு எதிர்செல்ல அவள் சோர்வுற்று எதிர்நின்றாள். உடனே அவளைப் பாசத்தா லிறுகக்கட்டித் தனது படையினை யேவி மோகன் சிரத்தினைக்கொண்டு அவன்பொருள் களையெல்லாங் கிரகித்தனன். அப்போது யுத்தகளத்தி லிறந்தசேனையனைத்தும் தேவதேவனாகிய மகாதேவனா ருளால்பிழைத்து எழுந்தன. சோழன்காளியினைப்பாசூ ர்நாதன் சந்நிதானத்தில் விடுத்து இவளை என்னசெய் வது என்றனன். முன்னமே இவ்வூர் எல்லைகளைக்காவல் கொண்டிருக்கு மாகாளி, பாசூராளி, பொற்றாளி, எல் லையாளி என்ற நால்வருடன் இவளையும் விலங்கிட்டு, இவ்வாலயத்துள் வைப்பாயென நாதன் கட்டளையிட, அங்ஙனமே செய்து காஞ்சிக்கரிகாலச்சோழன் றன்னிக ரின்றிப் பரமசாம்பவகோடிகளு ளொருவனாய்வாழ்ந்து வந்தனன்.

காளியைச் சிறையில்வைத்தசருக்க முற்றிற்று.

## அரவமாட்டிய சருக்கம்.

சிவபாதவிருதயர்களே! வேதமணம்வீசும் வேயி ணடியின்முளைத்த விமலனார் அனுக்கிரகம்பெற்று அரசு செய்துகொண்டிருக்குங்கரிகாலச்சோழன் மோகூர்காளி யினைச் சிறையினில்வைத்த செய்தியைக் கச்சியூர்க்*குறு ம்பனெனு மொருசமணன் கேள்விப்பட்டுப் பொறாமை கொண்டு அச்சோழனைச் சூழ்ச்சியில் வெல்லவேண்டு மென்று கருதி, தந்திரங்களில் வல்ல சில சமணர்களைய ழைத்துக்கூற அவர்களவ்வாறேசெய்துமுடிப்போமென வாக்களித்துச்சென்று ஒருமந்திரயாகம்() வளர்த்தனர். அவ்வியாகத்திலிருந்து சிவந்தமேனியினையும், வளைந்த பற்களினையும், விரிந்த மயிரினையும், ஏழுநாவினையுமு டைய ஒரு அக்கினிதோன்றி, இங்கென்னையழைத்தகார ணமேதென்றது, காஞ்சிமாநகர்க் கரிகாலச்சோழன் திரு ப்பாசூரிலிருந்துகொண்டு மோகூரினைச்செயித்து, அவ் வூரினுக்குக் காவலாக விருந்த காளியாம் பெண்ணைச் சிறைவைத்தனன். அவனைத் தண்டித்தல் வேண்டுமெ

*இக்கச்சியூர் காஞ்சீபுரமன்று திருப்பாசூரினு க்குவடக்கிலிருந்த சமணர்பாடி.

() இவ்வியாகம்வளர்த்தவிடம் கொழுந்தனூரென் று இப்போது வழங்குகின்றது.

ன்று சமணர்கூற, அக்கினியவர்களைநோக்கி, அரசனீதி தவறுவானாயின அக்குற்றமியாருக்காகும், அதைக்கவ னிக்கவேண்டிய அவசியநமக்கில்லை, சக்தியினையேசெயி த்து அவளைச்சிறைவைத்தானென்றால், அவனைச்செயிக் கநம்மால்முடியுமோ? நீதி குன்றாதபேருக்கு நிகழ்வது வெற்றியே யாகும், நீதியில் வழுவினோருக்கு நிகழ்வது தோல்வியாகும், சோழன் நீதிதவறாதவனாகையால் செய ம்பெற்றான், நீதியைத்தவறிய காளி தோல்வியுற்றாள். விரதபங்கம் கருதாத குலத்தினராகிய நீங்கள் இங்ஙன ந்தீமைசெய்ய நினைக்கலாமோ என்றது. சோழனுடைய வல்லமையினைக் கேட்டக் கச்சியூர்க் குறும்பன் பயந்து அவனை வெல்லும்படி யெங்களைக் கேட்டுக் கொண்ட னன, நாங்களும் அங்ஙனமே செய்வதாக வாக்களித்த னம். ஆகையால் நீ இப்போது ஒரு பாம்பாக வேண்டி யதென்று சமணர்கள் கேட்டுக்கொண்டவுடன் அவ்வக் கினியானது உடலைமுறுக்கிச்சீறி, ஒலிபடம்விரித்து பற் களினின்று நஞ்சுமிழ்ந்து,வாயைத் திறந்து, வாலாட்டி, கண்களினெருப்புப்பொழிய மண்மேல் பாம்பாகி ஆட் டியது. அதனையொரு குடத்திற் றங்கும்படி கேட்டுக் கொள்ள அது அவ்வண்ணமே குடத்தி , னுழைந்தது. அரவே! கரிகாலச்சோழன் இந்தக் குடத்தைத் திறந்த

வுடன மலைபோலெழும்பிச் சபையிலுள்ள அரசாமுதலானயாரையும் விழுங்கிடுவாயாகவெனக் கேட்டுக்கொண்டு, அதன் சம்மதத்தினையும் பெற்று, அக்குடத்தினவாயைமூடி அப்பாம்பினைவாழ்த்திக் கையாற்றொழுது போற்றி, எங்களெண்ணத்தினைமுடிக்க நீயல்லால்வேறில்லையெனப் பலதரமியம்பி மந்திரத் தடையினைவிட்டு, பாம்படைத்த பாற்குடத்தினைக் கச்சியூர்க் குருமபனிட்டுஞ் சமணர்கள் சேர்த்தனர். அவனை கண்டு மகிழ்ந்து ஒரு திருமுகமெழுதிப் பாற்குடத்துடன் தந்திரத்தில் வல்ல சிலதூதர்வசமாகக்கொடுத்துச் சோழனுக்குஅனுப்பிவைத்தனன். அத்தூதுவர்கள் பாசூருக்கு வருவதற்குமுந்திக்கற்பகநாட்டுத் தேவேந்திரனையொத்த கரிகாலன் கனவினில் வேயின்றமுத்தர் வெளிவந்து அன்ப! நாளையதினம் நினது சபைக்குப் பாம்படைத்த பாற்குடமொன்று வருமென்று கூறினர். சோழன் விழித்தெழுந்து பெருமானின் கருணைப்பெருக்கை வியந்து தனது நித்தியக்கடன்களை முடித்துக்கொண்டு மந்திரிபிரதானிகள் சூழச் சபையில் சிங்காசனத்திருந்து தான் கண்ட கனவினைத் தனது மந்திரி முதலியவர்கட் கெடுத்துச் சொல்லினர். அவர்கள்கேட்டுநமக்குப் பரங்கருணைத்தடங்கடலாகியபாசூர்நாதனுளன், பயமில்லையென்று பேசிக்

கொண்டிருக்கையில், கச்சியூர்க்குறும்பனனுப்பிய பாற்குடத்தினைத் தூதுவர்கள்கொண்டுவந்து சபையில்வைத்து, திருமுகவோலையினையீந்து தொழுது நின்றார்கள். அவ்வஞ்சகக்குறும்பனோலையை அரசன்படித்துப்பார்த்துத் தூதுவர்களே! நீங்களென்செய்வீர், பாவம், ஆலகாலமுண்ட ஆண்டவனென்பாலிருக்க விந்த அல்பசெந்துவாகிய பாம்போ வெனைக்கொல்வது என்றுகூறி, இப்பாற்குடத்தினை நாமவிழாவிட்டால் பயந்ததாக நினைவருமே என்றாலோசித்துக் கொண்டிருந்தனன். அப்போது, குவலயமெலாம் போற்றும் கொன்றைவேணியங்கடவுள் ஒருகுடுமிவேடந்தாங்கினர், நெற்றியிற் சிந்தூரப்பொட்டிட்டு, வெண்ணீறுபூசி, கருடப்பச்சையிருகாதிலுசேர்த்து, முகரோமமுறுக்கி, பாம்புகளைமாலைகளாகப்புனைந்து, பிரம்பேந்தி, பட்டணிந்து, இடது காலில் விருதுகட்டி, சீடர்கள் பாம்புபெட்டிகளைத் தாங்கிவர, சிவிகையேறி செயகண்டி, தாளம், முரசு, கொம்பு, காளம், மணிமுதலிய முன்னார்ப்ப, நான்குவெள்ளிக் கம்பங்களின்மத்தியிலொரு பொற்கம்பமுயர, அதில்கசை, வாள், சம்மட்டி, கண்டை, உலக்கை, சேட்டையின் கொடிகள் முதலியகட்டி, பரிசனமுன் கொண்டுசெல்ல, சீடர்கள் யாரும் அம்பேந்தி ஆடிப்பாடித் தங்கள் வல்லபங்களை

யோதிவர, பிடாரர் குருபரன்வந்தான், வந்தானென்று சின்னந் தாரை யூத, இராஜராஜேந்திரனுகிய கரிகாலச் சோழன் செய்த பூர்வத்தவப்பயனே திரண்டு ஒருவடி வங்கொண்டுவந்தாலென்ன, இராஜசபையில் வந்தெழுந் தருளினர் மன்னர்மன்னவன் அக்குடிமிவேட முடையா ரைத் தரிசித்தமாத்திரத்தில் இருகரங்களேயுந் தன்னேம றந்து சிரமேற்கூப்பி, சொற்குழறி, உரோமஞ்சிலிர்க்க, மந்திரியின்முகத்தைநோக்கி இக்குடுமியாவர் ? எனது பூர்வ வினையையொழிக்கவந்த புண்ணியமூர்த்தியோ ? என்ன, அக்குடுமி வேந்தனேப்பார்த்து, மனன ! அரவ மாட்டவின்று நாம்வந்தோம் அங்ஙனஞ்செய்ய வுமக்கு இச்சையோ ? எனறனர். வாடிய பயிரினுக்கு மாரிவந்து தவுமாறுபோல நாம்நாடியகுடிமி யிங்கு நமக்கு நண்ணி னனொன்று அரசன்மகிழ்ந்து குடுமியாரே ! இந்தபபாற் குடத்துப் பாம்பை யாட்டுவீராகவென்று முன்வைத்த னர். பிடாரர்தலைவர் ஈங்கிது நமக்கு அரியதொழிலோ வென்று அந்தப் பாற்குடத்தையவிழ்த்து, தட்டி, சிறி துதுாரநீங்கி, பாம்புஎதிர்நோக்க வூதி, மூடியைத்திறக்க, அதினின்றும் மலையினைப்போலெழும்பி, படம்விரித்து நின்றிடக் கண்டோடோரோடினர். அரசனும் நெஞ்சங்கலங் கினன், பாம்பாடலைக் காணும்பொருட்டுத் தேவர்கள

ஆகாயத்தினெருங்கினர். குடுமியானவர் பாம்பினைநோக்கி அழைப்ப, அது திருவடியில்வணங்கி, உடல்குறுகி, படஞ்சுருங்கி நின்றது. குடுமி ஒரு முழந்தாளை யூன்றி ஒருமுழந்தாளைநீட்டி, ஒருகரம் பாம்பைத்தூண்ட, ஒருகரமடக்கி, மதுரகீதமுணடாம்படி, இசைக்குந் தகுந்த ஏழுதுளைகளமைந்தமூங்கிலினைச்சுரைக்காயிற்சொருகியவொருகருவியினைத்தன் திருவாயினில்வைத்தூத,மலைகளுருகின, கடலலையினைமோதாது அசைவற்றது, சூரியன் சந்திரனுயினன், காற்று சலனமற்றது, அக்கினிகுளிர்ந்தது, சராசரப்பொருள்களனைத்தும் உணவுமறந்து பகைமறந்து ஒருதன்மையாயின, குடுமியானவர் பாம்பினையெடுத்து எறிந்து எறிந்து ஆட்ட, நிருபன் கண்டு குடுமியே! நினக்குவேண்டுவதியாது? என்ன இப்பாம்பினை நான் சுற்றிவிடில் இதுசூழ்ந்தவட்டமெலாமெனக்கு நல்குதியென்ற குடுமிக்கு அங்ஙனமே தந்தோமெனத் தராபதி தாரைவார்த்தனன். உடனே சோமசுந்தரக்கடவுள் பாம்பினைச்சுழற்றி விட்டனர். அது ஒரு காததூரம்போய் வளைந்து வந்துவிழுந்தது. மறுபடியும்பிடித்துக் கச்சியூர்க் குறும்பனுடல்மாளச்செய் என்று எறிந்திடலும், அது பாம்புருவமாறி அக்கினி யுருவங்கொண்டு போயவனை யழித்தது. அரசர்கோமா னதிசயித்த

னா, அண்டர்கள் கற்பகப்பூமழைபொழிந்தனர், அந்த ரதுந்துமி யாகாயத்தில்முழங்கின, அரியயனோடமரரொ லாங்கொன்றுழுதேத்தித் துதிசெய்தனர், வந்தகுடுமியார்சிவி கையேறிக் கோயிலிற் பிரவேசித்தனர், உடன்வந்த பரி சனமறைந்தனர், நிருபன் ஆலயத்திற்சென்று ஆனந்த பரவசனாய்ப்பாடி, கண்ணீர்சொரியவுருகி, நெஞ்சமழிந்து உடனடுங்கி நின்றவுடன், அரசனே! அரவின் வரவினை நின்கனவிற்கூறினோம், பின்னரதையெடுத்தாட்டினோம, ஆகையால் நீயெனக்குத் தத்தஞ்செய்ததனை மறவேல் என்றொரு அசரீரி பிறந்தது. பெருமானே! இவ்வண்ட மெலா முன்னதாக விருந்தும் எனனையொரு பொருட் டாக வெண்ணிவந்து சிறிதுபூமிகேட்பதும் ஆச்சரியம, இங்ஙனங் கேட்பது அடியேனை யாட்கொள்ளவேண்டி யேயன்றி வேறில்லை. நீயென் மாட்டுவைத்ததிருவருளை யென்னென்று வியம்புவேன், எங்ஙனம்புகழ்வேன், என் று பலவாறு மொழிகுளறித் தொழுது புறம்போந்து, பாம்புசூழ்ந்த வட்டமனைத்தும்பாசூர்ப்பெருமானுக்கெ ன்று கற்சிலையிலெழுதி நாட்டிக்களித்தனன். பசுபதியா கிய பரமன் சுழற்றிவிட்டபாம்பினது தலைவிழுந்தவிடம் தலைக்காஞ்சியூரொன்றும், குண்டிவிழுந்தவிடம் குண்டி யூரொன்றும், உதப்பைவிழுந்தவிடம் உதப்பையென்றும

வால்விழுந்தவிடம் அரன்வாயிலென்றும், ஆடயெரிந்தவிடம ஆடரவின்பாக்கமென்றும், பாம்பினுடலில்பெரும் பாகம்விழுந்தவிடம் பெரும்பாக்கமென்றும் இப்போது ங்கூறிவருவர்.

அரவமாட்டியசருக்க முற்றிற்று.

---

## திருமலிசெல்வச் சருக்கம்.

சிவத்துக்கினியசெல்வர்களே! கருங்காலனையுதைத்த செங்காலனாகிய கண்ணுதலோன் கழலிணைமறவாக் கரிகாலச்சோழன் சிற்பசாத்திரங்களில்வல்ல சிற்பசாஸ்திரிகள் பலரையழைத்து, பவளச்செவ்வாய் பார்வதி சமேதனாகிய பாசூர்நாதனுக்கு வேண்டிய வாலயமாதி புரிகவென்று கட்டளையிட்டனன். அச்சிற்பிகள் வலம்புரி விநாயகருக்கும், சுப்பிரமணியருக்கும், பாசூர்நாதருக்கும், தங்காதலியம்மனுக்கும் தனித்தனி விமானங்கள், மண்டபங்கள், மதில்கள், கோபுரங்களுண்டாக்கி, வீதிகள், மாடங்கள், சதுக்கங்கள், சந்திகள், சாலைகள், தெற்றிகள், மன்றங்கள், பொதுக்கள், குன்றங்கள், சூளிகைகள், கூடங்கள் முதலிய, அன்னவாகனமும் கண்டதிசயிக்க அமைத்தனர். முன்னர் தேவதேவனாகிய சிவபெ

ருமரன் திருவருளினால் மருள்கொண்ட சேடச்செல்வர் இந்நகரின் அலங்காரங்களைக்கண்டு, நாம் நினைத்ததை முடித்தனனெம்பரஞ்சோதியென்று கவலைதீர்ந்து எம் வாழ்வைமாற்றிநின்னிணையடிக்காளாக்குவா யெம்பெருமானே ! என்றுதோத்திரஞ்செய்து, எண்ணருங் கைலையிலிருப்பிடங்கொண்டனர். இக்காட்சியினைக்கண்ட வரசர் ஈங்கிவர்பெற்றபேறு யார்பெற்றாரென்று வியந்து, சிவாலயபூசைமுட்டாது நடந்தேறிவரச்சிலரை நியமித்து, நால்வகைச்சாதியினரையுங் குடியேற்றினன். பின்னரொருநாள் மனத்தினும் வேகமானகுதிரையேறி வடக்குநோக்கிச்சென்று, வடவரையைச்சாடி, அதன்மீதுதனது புலிக்கொடியைநிறுத்தி, நிடதமலை, ஏமகூடம், மகாகபி முதலியதரிசித்து, இமயத்துந்தனது கொடியைநாட்டி, கங்கையையடைந்து, காசியாலயத்தினெழுந்தருளியிருக்கும் ஆதிசைவர்களாகிய குருக்கள்மார்களைத் தரிசித்து வணங்கி அவர்கட்குத் திருப்பாசூர்நாதன்திவ்விய சரித்திரங்களையெல்லாமெடுத்துரைத்து அருமறைவேதாகமங்களை யுணர்ந்த அந்தணர்மணிகளைத் தேரின்மேலெழுந்தருளச்செய்துகொண்டு, வழியிலுள்ள பெருங்கருணையாளன் பிரபலதலங்களையெல்லாந் தரிசனஞ்செய்துகொண்டு, தேவர்கள்சூழ, இந்திரன் வருவதுபோலத்

திருப்பாசூரிற்பிரவேசித்து, சிவாலயப்பூசனையைச்சிவாகமங்களிற்குறித்தபடி சைவவேதியர்களைக்கொண்டு நடத்திவந்தனன். சோழன் வடவரைக்கேகும்போது தனனுடன் வலமிடந்தோள்போல்வந்த சோழகுமாருக்கும் சைவருக்கும், அப்பதிகுழெல்லையினை மூன்றுபங்காக்கியீந்தனன். எம்பெருமான் பூசையென்றுந் தடைபடாது நிறைவேறிவர ஈக்காட்டுக்கோட்டத்தில் உத்தமகுலோத்தமரானபழையவேளாளர்களே யென்றுணர்ந்துஅவர்களுக்கு முதன்மையீந்து அவர்களுள் குற்றமொன்றில்லாதமாதவரொருவரைநாடி, அவருக்கு உருத்திரதேவனெனப்பட்டங்கட்டி,படாதிபத்தியமுந்தந்து, மகேசுரபூசைவழுவாதுநடந்தேறிவரச்செய்து சகலசெல்வங்களும் வளரவைத்தனன்.

நிற்க. சத்தியுடன சிவாலயம் உயிரோடுமெய்யுணர்வாயும்,பரிவாரங்கரணங்களாயும், செய்குன்றிஞ்சிபொறிகளாயும், தத்துவங்கள் மாடங்களாயும், அகழி பூதவுடலாயும், நான்குவாயல் நான்கு முகங்களாயும் பாசூரானது நான்முகனையொத்துவிளங்கும். ஆகாயத்தினைத்தாங்குவதுபோல உயர்ந்திருக்கும் வீடுகளின்மீது சந்திரகாந்தக் கற்களிழைத்த இடம், மலைகளின்மீதுள்ள சுனைகளையொக்கும், அங்கு வருஞ்சந்திரனைக்கண்டு

உருகியருவிபோல வீழ்கின்ற புனலானது தேவாதிதே வனுகிய சிவபெருமானது சந்திரசடாபாரத்தினின்று மோடிவருங் கங்கையினையொத்திருக்கும். வெள்ளியினு லும பொன்னினுலும் பளிங்கினுலும விளங்குமாடங்க ளின்மீது, பொன்னுலும் நீலத்தாலும் பச்சையாலுங் கட்டியுள்ள ஆரமியங்கள் அன்னம கருடன் இடபம் இவைகளின்மீது அயன்மால்இந்திரனேறியிருத்தலையொ த்திருக்கும. முற்காலத்திலிந்திரனல் சிறகரியுண்டமலை களனைத்தும் வீதிகளிலடைந்து நிறைந்துபூமியிலிருந்து ஆகாயத்தளவுமுயர்ந்து அவ்விந்திரனைவெல்லத் திருப் பாசூர் நாதனிடம் வரம்பெற்று வானத்தினையேநோக்கி ப்பெரும்படையெழுந்து யுத்தஞ்செய்ய மணிதராகிய படையைத்தன்மேல் வாழுதலை நிகர்க்கும்படியாகவொ த்தவீடுகளெங்கும் விளங்கும். இத்தகையவீடுகளின்மீது பொற்குடங்களுடன் கண்ணுடிவைத்திருப்பது மலையின் மீது சந்திரனுடன் சூரியன் உறவுசெய்தாலென்ன வொ த்திருக்கும், தங்கள் தங்கணயகர்களுடன் புலவிக்கால த்திலாடியமாதர்கள் வீசியஆபரணமுதலியவீதிகளினி றைந்துவிளங்குவது குபேரன்கடைவிரித்ததையொத்தி ருக்கும். ஒளிவீசாநின்ற அழகிய வீதிகடோறு மமைந் தவுன்னதமான வீடுகளின்மீது அழகிய நாயகர்களும்,

நாயகிகளும் விளையாடி யொருவர்மேலொருவர் தூர்த்தி கொண்டு குங்குமநீரைவீச உபரிகைகளில் அந்நீர் தடாகம்போலத் தேங்க அதிற்சந்திரன்படிந்து தன்வெண்மேனிசெம்மேனியாகவிளங்குவன். பொன்னாற்குயிற்றிமணியாலிழைத்து ஓங்கிய மாடங்களின்மீது வண்டுகள்தேன் சொட்டுங்கற்பகப்பூவிலிருக்குங்கிலைபெற்ற அழகியமின்னலைப்போல இடையினைவாய்ந்த மாதர்களுடைய மலர் மென்கூந்தலில் உள்ளமதுவினையுண்டு மறுபடியுந் தன்னுலகைநாடாது இசைபாடித்திரியும். மானினையேந்திய செவ்விய திருக்கரத்தினைவாய்ந்தவரது நெற்றிக்கண்ணால்வெந்துபொடியாகவீழ்ந்தமீனக்கொடியினையுடைய மன்மதன் பஞ்சபாணங்கள் வீதிகடோறு நெருங்கிய இளைஞரிடத்திடமாகக்குலவும். விண்ணைமுட்டியநீண்ட மாடத்தெங்கும் அன்னநடைமடவார்நிற்கை, மயில்கள் பலநீண்ட மலைகளின்மேற் றோன்றுதல் போலும்.மாதர்க்ள்மூட்டு மகிற்புகைசேர்ந்த மாளிகைகள்மீது காதுகளிலுள்ள மகரக்குழைகளின் பிரகாசம் தேகமுழுதும் வீச நின்றுகொண்டிருத்தல், மேகந்தங்கி யுயர்ந்தகிரிகளின்மீது மின்னற்கூட்டங்கள் விளங்குதலையொக்கும். சந்திரமண்டலத்தினைத்தோய்ந்த மாடங்களின்மீது நெருங்கி வரிசையாகவிளங்கு நீண்டவெண்கொடிகளாடுவது,

ஆகாய கங்கையிலுலவு மீன்களையொக்கும், அன்றியு
ம் இத்திருப்பாசூரேமோட்சவீடு இவ்விடம் யாவரும்
வாருங்களென்று பலவுலகத்தவர்களையுங் கூப்பிடுதலையு
மொக்கும், பிராம்மணர்கள் உபரிகைகளின்மீது ஏறியிறங்
குவது தேவர்கள், ஆகாயத்தினின்றும் வீடுகளைச்சோபா
னமாகக்கொண்டு இறங்குவதனையொக்கும். வளங்கனில
வு மணிமாடங்களிலுள்ள பிரகாசம்பொருந்திய பலக
ணிவாயல்தோறும், ஆபரணங்களை யணிந்த மடவார்
முகங்கள்தோன்றுங் காட்சியானது, அனேகமான சந்தி
ரர்கள் தங்கள்களங்கங்களை யொழித்துக்கொண்டு மலை
கள்மேல்தோன்றுதலை யிகர்க்கும், அவ்விடங்களிலுள்ள
யுமன்னங்கள் மறைவாக விருந்து அம்மாதர்க ணடையி
னைக்கற்கமுடியாது நேரே சமீபத்திலிருந்து பழகுதற்
கு வாழுதலைநேரும். ஓங்கிய வெழுநிலையோடுங் கூடிய
மாடங்கள்தோறும் வாழும் பெண்கள் பகலுமிரவும் பா
சூர்நாதனையே புகழ்ந்துபாடும் பாட்டிசையினும், நட
னசாலைகளிலே நடிக்கு முருத்திர கணிகையரின் சிலம்

பொலியும், பல்வாத்தியங்களி னொலியும், கல்விபயிலு வோர்களொலியும், வேத வொலியும், வீதிகடோறும் தேர், கரி, பரி, ஆள்கள் சஞ்சரிக்குமொலியும் கூடிக்கட லொலியினு மதிகப்பட்டுவிளங்கும். எந்நிலத்திலுமுண் டாகும் பொருள்களெல்லாம் இங்குக் காணப்படலால் கடலினையும், இறவாதபேரின்பத்தினைப் பயத்தலாற்சிவ லோகத்தினையும், செல்வம்பொலிந்திருத்தலால் அளகா புரியினையும், அழகினால் பொன்னுலகத்தினையும், சகல போகங்களு மமைந்திருத்தலினால் போகபூமியினையும், ஒப்பாகுமொத்தலினால் இதன்மகிமையினை யென்னவெ ன யாவராலெடுத்துரைக்கக்கூடும். குங்குமமமைந்தபுய ங்களோடுங்கூடிய நாயகர்களையும், கோவைப்பழம் போ ன்ற வதரத்தினைவாய்ந்த அழகியவளையல்களைப் பூண்ட நாயகிகளும், சந்திரனையொத்த நெற்றியினைவாய்ந்த சே யர்களும், எப்போதுங் குதூகலத்தோடு வாழுகின்றவ களும், பரிசுத்தம்பொருந்திய நந்தவனங்களும், பிரகா ம்பொருந்தியவீதிகைகளும், தாமரையில்வசிக்கும் இல குமியின்வாசமும், மழலைத்தீஞ்சொல்லுமே யெங்கனு

ங்காணக்கூடிய அருமையான மங்கலங்கிறைந்த காட்சியி
னையாவருக்குங்கொடுத்துக் கொண்டிருக்கும் இத்திருப
பாசூர்.

திருமலிசெல்வச்சருக்க முற்றிற்று.

---

## திருவிழாச் சருக்கம்.

சிவசரணங்களையுடையமுனிவர்களே ! கவின்பெறுநீ
றும், கண்மணிமாலையும், கல்லாடையுமுடையார் கண்
ணுதன்மூர்த்தியேயென்று, கனிந்துவணங்குங்கரிகாலச்
சோழன், பண்ணவர்போற்றும் பாசூர்நாதனுக்குப் பல
திருவிழா வெடுத்துப்பரிந்து, கண்களாரத்தரிசிக்க ஆவ
ல்கொண்டு, அனுதினமிற் சதாசிவத் தைம்முகமொன்றி
லவதரித்து அவராலேயே தீட்சிக்கப்பெற்ற ஆதிசைவர்
களாகிய குருக்கள்மாரை யழைத்து, வேதபாஷியங்களா
கிய காமிகாதியாகமங்களின் கருத்தை விசாரித்து, வை
காசிமதி பூசநக்ஷத்திரத்தில், அழகெலாமொருங்கமை.
ந்த ஆலயத்தில் விடைக்கொடியேற்றி, நான்குமாடவீதி
களையுமலங்கரித்து, எங்கணு மகரதோரணங்கள்கட்டி,

பற்பலமணிகளிழைத்த தம்பங்கடோறுங் கமுகமரங்க
ளும், பசுங்குலை வாழைமரங்களுநட்டு, வீதிகளின் சந்தி
களில் பூப்பந்தல்களைத் தூக்கி மாளிகைகளின்மீது வெ
ண்கொடிகளை வரிசைவரிசையாக நிறுத்தி, ஒவ்வொரு
வீட்டின் திண்ணைகள்மீதும்பூரணகும்பங்களைவைத்துத்
தெருக்கடோறும் பனிநீர்தெளித்துப் பின்னர், தனிப்ப
ரம்பொருளாங் கர்த்தையாகிய பாசூர்நாதருக்கும், தனித்
தாயாந்தங்காதலியம்மைக்குங் காப்பணிந்து, பலவாபர
ணங்களையும், பலவிதாம்பரங்களையுந் தரித்து, பத்துத்
தினங்களும் பொன்மயமான பற்பலவிமானங்கள்மீதும்,
பற்பல வாகனங்கள்மீதும், விசித்திராலங்காரமமைந்த
இரதத்தின்மீதும் காலையிலும் மாலையிலும் மாடவீதி
வலம்வரவெழுந்தருளச் செய்வித்தனன். ஒவ்வொருநா
ளும், ஆனைமுகன், ஆறுமுகன், சண்டேசர், அம்மையா
ருடன் அருட்பெருங்கடவுளா மாண்டவனாகிய பாசூர்
நாதன் காலையில் வீதிவலம்வந்தபின்னர்; இரவில் மகா
சைவர்கள் வேதபாராயணமோதவும், குங்கிலியதூபமெ
ங்கணும்வீசவும், சிவனடியார்கள் நாமாவளிகள்கூறவும்,

வெண்கொற்றக் குடைநிழலைச்செய்யவும் சாந்தாற்றிநெருங்கவும், சாமரம்வீசவும், எள்விழுதற்குஞ் சிறிதுமிடமின்றி அன்பர்களெருங்கிவரவும்; சூரியன், சந்திரனட்சத்திரம், யானை, யாளி, சிங்கம் போன்றதீவர்த்திகள் முன்னும்பின்னு மாயிரமாயிரமா யேந்தவும்; தாளம், தண்ணுமை, திண்டிமம், சின்னம், சங்கம், எக்காளம் பூரி, குடமுழவு, முரசு, பறை, கைப்படகம், யாழ், பேரிகை, காகளமுதலிய வாத்தியங்கள் முழங்கவும் வீதிவலம்வந்தனர். பிராமணமாதர் அட்டமங்கலத்துடனே யெதிர்கொண்டனர். தேங்காய், தாம்பூலம், காசு, கற்பூரத்துடனே ஒவ்வொருவீட்டிலும் தீபாராதனை செய்தனர், சிலவடியார்கள் பாடினர், கிண்கிணியோசை, சிலம்போசை, மேகலையோசை மிகுந்தோங்க அன்னநடைபோல நடையும், அரம்பையர்போ லழகுமுள்ள நாட்டியப்பெண்கள் கூட்டங்கூட்டமாய்க்கூடி யெங்கு நாட்டியமாடினர்.

குடிசார்வணியக் குரும்பரன்வர்தான்
புண்ணியாவர்த்தப் புராரிவந்தான்

மாணிக்கமாபுரி வள்ளல்வந்தான்
பிரளயாகலபுரப் பெம்மான்வந்தான்
மாயாபுரியில் மகிழ்வோன்வந்தான்
தங்காதலிபுரத் தாணுவந்தான்
அபயபுரத்தங் கண்ணல்வந்தான்
சோமபுரத்துச் சூலிவந்தான்
பரஞ்சுடர்ப்பதியின் பரமன்வந்தான்
மங்கலமாபுர மகேச்சுரன்வந்தான்
மால்வினைநாச வாணன்வந்தான்
வாசபுரியில் வாழ்வோன்வந்தான்
பாசூரெங்கள் பண்ணவன்வந்தான்

என இத்தலத்துப் பதின்மூன்று திருநாமங்களை யுஞ்சொல்லி அன்பர்கள்தோத்தரித்து ஆரவாரித்தனர். இத்தகைய ஆடம்பரங்களுடன் பாசூர்நாதன் வீதிவலம் வந்து ஆகாயத்தினையளாவிய் வெழுநிலைக் கோபுரவாயலையடைந்தனர். ஆதிசைவர்கள் நிவேதனத்துடன் தீபாராதனைகாட்ட, உருத்திரகணிகையர் நாட்டியமிசைமருவி யநடனமிட, ஆலத்திசுழற்றி எச்சரிக்கை சோபனம் பா

டினர். திவ்வியசம்புவாகிய நந்தியெம்பெருமான் வேத்தி
ரப்படையுடன் முன்னேசெல்லச் சிவாலயத்துட் பிரவே
சித்துப் புண்ணியமூர்த்தி திருவோலக்கங்கொண்டெழு
ந்தருளியிருந்தனர். இவ்வகையாகப் பத்துத் தினமும்
விழாக்கோலங்கொண்டு, பாலாற்றின்தீர்த்தமாடி, மவுன
பலிதூவி, பிறபூசையுமாற்றித் தூக்கிய விடைக்கொடி
யை யிறக்கினர். வைகாசிமாதம் பிரமோர்ச்சவ முடிந்த
பின்னர், ஆனிமாதம் வசந்தோற்சவமும், ஆடிமாதம்
உலகமாதாவாகிய தங்காதலியம்மையாருக்கு ஆடிப்பூரவு
ற்சவமும், ஆவணிமாதம் மலைமகள்மகிழ்ந்தளித்தமூலா
தாரப்பொருளா மதகுஞ்சரத்திற்குச் சவுத்தி யுற்சவ
மும், புரட்டாசிமாதம் நவராத்திரியுற்சவமும், ஐப்பசி
மாதம் சூரனைப்பிளந்தசுந்தரவடிவேலேந்திய சுப்பிரம
ணியசுவாமிக்குச் சஷ்டியுற்சவமும், கார்த்திகை மாதம்
ஞானதீபவுற்சவமும், மார்கழிமாதம் அகிலலோகங்களை
யுமாட்டிவைக்கு மற்புத ஆனந்தத்தாண்டவ சபேசனு
க்கு ஆருத்திரா தரிசன வுற்சவமும், தைமாதந் தெப்ப
லோற்சவமும், மாசிமாதம் சர்வசங்காரகாலத்தில் பிரம

விஷ்ணுமுதலியதேவர்களெல்லாம் பிணங்களாய்க் கிடக்கத்தனித்துநின்ற தற்பரனிரவுகாலமாகுஞ் சிவராத்திரியுற்சவமும், பங்குனிமாதம் திருக்கலியாணசுந்தரமகோற்சவமும் நடத்திவைத்தனன். அன்றியும் நித்தியத்திருவிழா, மழைக்காலத்தில் பவித்திரோற்சவம், முன்பனிப்பருவத்தில் விடியகாலபூசை, பின்பனிப்பருவத்தில்திருப்பொன்னூசல்முதலியனவுநிறைவேற்றினர். இத்திருவிழா காலங்கடோறும், கரிகாலச்சோழன் அநேகமானபூதானம், கஜதானம், அசுவதானம், கோதானம்,கன்னிகாதானம், சுவர்னதானம், அன்னதானமுதலியசெய்துவந்தனன். பின்புஒருநாள் அரசவள்ளல் மங்கலதீர்த்தத்தில் நீராடி, அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, திருநீறுந் திருக்கண்மணிமாலையுந் தேகமெலாம்விளங்கவணிந்து, இருகைகளுஞ் சிரின்மேற்குவியத் தோன்றிய பேரன்புடனே, செல்வத்திருக்கோபுர வாசலிற்சென்று, வணங்கியுள்ளேபிரவேசித்து,மூலையாகப்பிரதட்சணஞ்செய்து தெய்வத்தன்மையுடன்விளங்கிநின்றுயோங்கு மூங்கிலினடியில்தேசோமயமுங்கடல்போல்விளங்கும்

கருணாநிதியான பாசூர்நாதனைக் கண்ணாரககண்டு, கருத்திட்டமாகக்கொண்டு, அஷ்டாங்க, பஞ்சாங்கமாக அடிக்கடிவணங்கி, மகிழ்ந்து, ஆனந்தக்கண்ணீர் சொரியத தாளைமுளைத்த தயர்பரமூர்த்தியாகிய முத்தையனைத் துதிசெய்யத்தொடங்கினன். சங்கரா! என்னிஷ்டமெல்லா நிறைவேறியது. சம்புவே! நான் பாக்கியவானாயினேன், சாம்பசிவனே! நான் பெற்றபேறு எவர்பெற்றார் சதாசிவனே! அனேககோடி சென்மாந்திரங்களி லடியேன்செய்த புண்ணியங்களனைத்தும் இப்பிறப்பிற் பிரயோசனமாயிற்று, என்குலதெய்வமே! உன்னிடத்தில் மாறாதபத்தியே யெனக்கென்றும்வேண்டும், ஆரமுதே! உன்னைத் தெய்வமென்றுணராத மூடர்கள் என்வமிசத்திலெந்நாளும் பிறவாதிருக்கவேண்டும். அன்றியும் இவ்வற்புதத்தலத்தில் நடக்குந்திருவிழாவைபவத்தினைச்செய்பவரும், செய்யப்பொருளுதவி செய்பவரும், தரிசனஞ்செய்பவரும் இம்மையில்தனமும், பக்தசனமும்பெற்று மறுமையிற் சிவசாரூபந்தவாமனையுமடையும்படி கிருபைபுரிந்தருள வேண்டுமெனறனன். "அங்ஙனமே யாகுக"

என்று அசரீரிபிறந்தது, சோழன்கேட்டு அடக்கக்கூடாத ஆனந்தங்கொண்டு, விடைபெற்று, மெல்லமெல்லத்திரும்பிப் புறம்போந்தனன். ஆலயத்திற்கு வேண்டிய வரும்பணியெலா நிறைவேற்றி, கற்றவர்களெல்லாம்போற்றுங் காமாட்சிசமேதராகிய கண்ணுதலாமேகாம்பரநாதர் வேதவிருட்சமாகிய மாவடியி லெழுந்தருளப்பெற்ற காஞ்சிமாநகரத்திற்சென்று, பஸ்ம, ருத்திராட்ச, பஞ்சாட்சராதிசைவதர்மங்களை நடாத்தி யுலகுபுரந்து புத்திரபௌத்திரருடன் வாழ்ந்து வந்தனன்.

சிவபோகத்தபசிகளே! நூறுகோடிபிரமர்கள், ஆறுகோடிநாரணர்கள், எண்ணிலாவிந்திரர்கள் தலைமாலைகளையே மலர்மாலைகளாகக்கொண்ட தயாநிதியாகிய திருப்பாசூர்நாதன் திவ்வியமங்களகரமான மான்மியத்தினை, எனது அருட்குருவாகிய வாதராயணமுனிவர் அடியேனுக்கு உபதேசித்தருளியபடியின்று உங்கட்குச்சொன்னேன். இப்புராணத்தினைப் படிப்பவரும், செவியிற்கேட்பவரும் பிறருக்கெடுத்துச் சொல்லுபவரும், பொருளுணாப்பவருக்குப்பொன்னுதிப்பவரும், அருச்சித்துப்பூசிப்

பவரும் யாவரும் இம்மையிற் பதினாறும்பெற்று மறுமையிற் தங்காதலியம்மை சமேதராகிய பாசூர்நாதன் திருவடி நிழலிற்றங்கி வாழ்வரென்று சூதமுனிவர் நைமிசாரணியர் கேட்க அருளிச்செய்தனர்.

திருவிழாச்சருக்க முற்றிற்று

---

வாழி விருத்தம்.

தங்காதலித்தாயோ டனுதினமுமொருவேயின்
தனிநீழற்கீழ்ப்
பங்காகித்திருப்பாசூர் தனிலமர்ந்தோன்
சேவடியும்பகர்துதிக்கை
யெங்கோனுமறுமுகனுஞ் சுத்தாத்துவித
சைவத்தெழில்விளக்கு
மங்காதவெண்ணீறுங் கண்மணியு
மைம்பதமும் வாழ்கவாழ்க.

---

## திருப்பாசூர்ப் புராணம்

## முற்றிற்று.

சிவஞானயோகிகள் திருவடிவாழ்க.